# தொண்டன்

ஆரம்பம்: பெப்ரவரி - 1969.





அந்த அதிசயம்
நிகழ்ந்த போது
கதிரவனும் கொஞ்சம்
நாணிக் கொண்டான்
வானத்து விண் மீனும்
மோனத்தை முடித்துக் கொண்டது
வளைந்தோர்க்கு வாழ்வு
நிமிர்ந்த போது
வளையாத செங்கோல்கள்
வளைந்தன - நெளிந்தன
வசந்தம் வந்து
உலகை
தழுவிக் கொண்டது.

— மலர் —

டிசம்பர் - 1996 — விலை 10/-

# தொண்டன்

டிசம்பர் - 1996

மலர்: 28 இதழ்: 10

ஆசிரியர்:
A. தேவதாசன்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்:
கண. மகேஸ்வரன்.
S. A. இருதயநாதன்
மெற்றில்டா இராஜேந்திரம்.

வெளியீடு:
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு. / மட். மறை மாவட்டம்,

முகவரி:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண் 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX 44,
BATTICALOA.
Tel: 065 - 2723

விலை: **10/-**

ஆண்டுச் சந்தா: **120/-**
(தபாற்செலவு உட்பட)



## உள்ளே..............

1. இதயந்திறந்து...... — 1
2. எவருக்கும் தெரியாது — 2
3. அமைதி பிறந்தது — 3
4 நூல் அறிமுகம் — 5
5. ஏரோது இன்னும் வாழ்கிறான் — 7
6. இலக்கிய மஞ்சரி — 12
7. மறைந்தும் - மறையாத விமர்சகர் — 13
8 இடர்பாடுகள் மத்தியில் இறைவனின் சமூகம் — 15
9. நீ கொடுத்து வைத்தவன் — 17
10. நேர்காணல் — 18
11. மனிதம் (தொடர்கதை) — 21
12 திருச்சபைச் செய்திகள் — 23
13 இன்னும் பிறக்க வேண்டும் — 24
14. கிளரீசிய... வேதபோதக சபை — 26
15. விவிலிய-பொது அறிவுப் போட்டி-17 — 27
16. விவிலிய-பொது அறிவுப் போட்டி-15 முடிவுகள் — 28

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே.

# இதயந்திறந்து........



எல்லோரினதும் எதிர்பார்ப்புக்கள்
ஏகோபித்த தயாரிப்புக்கள்
ஏசு நாயகன் பிறப்பு விழாவிற்கு.
சமயவாழ்விற்கும்
சமுதாயவாழ்விற்கும்
கொண்டாட்டங்கள் அவசியம்.
சமயத்திற்கும் சமுதாயத்திற்கும்
அவை புதுப் பொலிவைக் கொடுக்கின்றன.
ஏசு தனது பிறப்பு விழாக் கொண்டாட்டங்கள்
இறை அரசின் நிகழ்வுகளாக மாறவேண்டும்
என எதிர்பார்க்கிறார்.
அவரது எதிர்பார்ப்பு ஒன்றிருக்க
பிறப்பு விழா கொண்டாட்டங்கள் வேறாக இருக்கக் கூடாது
உயிருள்ள ஏழை அனாதைகளில்
ஏசுவைக் காணாமல்
குடிலில் இருக்கும் பாலக ஏசு சுரூபத்தில்
ஏசுவைக் காண விழையாதே.
ஏசு பிறந்த 2000ம் ஆண்டை நிறைவு செய்யும் வேளையில்
அதற்கான தயாரிப்பில்
ஏசுவின் பிறப்போடு
மலர்ந்த இறையரசை
உயிரோட்ட முள்ளதாக
வைத்திருப்பதே எம் பணி.
2000ம் ஆண்டின் தயாரிப்புக்கள்
இந்த ஏசு பிறப்பு விழாவோடு ஆரம்பமாகட்டும்.
ஆடையில்லாதோர்க்கு ஆடை கொடுங்கள்!
உணவு இல்லாதோர்க்கு உணவு கொடுங்கள்!
ஏசுவின் பெயரால்
ஏசுவின் நாமத்தினால்
ஏசுவுக்காக
பகிர்ந்து வாழுங்கள்!
1997ம் ஆண்டு யேசுவுக்கு
அர்ப்பணிக்கப்பட்ட ஆண்டாகும்.
உங்கள் தர்மச் செயல்கள்
ஏசு பிறப்பு விழாவோடு ஆரம்பிக்கப்பட்டு
1997ம் ஆண்டில்
அவர் (ஏசுவின்) பெயரால்
தொடரட்டும்.

- ஆசிரியர்




**ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரிலே பிறந்துள்ளார்.**

லூக் 2/11

# எவருக்கும் தெரியாது



டிசம்பர் - 25
அந்த மார்கழி இரவு
மின் மினிகளை
விண் மீன்களாக்கும்
என்று
எவருக்கும் தெரியாது.

நிசப்தத்தின்
நரம்புகளிலேயே
நாதம் மீட்டும்
என்று
எவருக்கும் தெரியாது.

புல் படுக்கையைப்
பூமியின் அச்சு ஆக்கும்
என்று
எவருக்கும் தெரியாது.

தச்சன் மகனைத்
தலைவனாக்கும்
என்று
எவருக்கும் தெரியாது.

மொட்டவிழ்க்காத
அந்த இரகசியம்
மானுடத்தின்
கட்டவிழ்த்த போது
எல்லோரும் சொன்னார்கள்

ஓ ! இவருக்காகத்தான்
காலாகாலமாய்
நாங்கள்
காத்திருந்தோம் ''என்று''

அன்று
அவன் யாரென்று தெரியாததால்
யாரும் கொண்டாட வில்லை
இன்று
கொண்டாடும் ஆடம்பரத்தில்
அவன் கொள்கைகளை
நினைப்பதற்கே நேரமில்லை.

● ஆதி

# அமைதி பிறந்தது

● பொ. வின்சன்ட்



அறியாத இளம்பருவம் தற்காலிக போலி அமைதியில் அகப்பட்டுத் தவிக்கும் பரிதாபக் காட்சியும் நம்மைச் சிலிர்க்க வைக்கின்றது. மொத்தத்தில் மனிதனுக்குத் தேவையானது அமைதியான வாழ்வு இந்த அமைதி உலகத்திலிருந்து கிடைப்பதில்லை என்பதை ஞானத்தால் அறிந்த முன்னோர் கடவுளிடம் கசிந்துருகி வேண்டினார்கள், அதை அடைந்தார்கள்.

'அமைதி' புற அமைதியாகவும் இருக்கலாம், அக அமைதியாகவும் இருக்கலாம் புற அமைதியை அடக்கு முறையால் துப்பாக்கி முனையில் கொண்டு வரலாம். ஆனால் அது குமுறும் நெஞ்சங்களை இன்னும் கொந்தளிக்கவே செய்யும் அக அமைதியோ ஆவிக்குரிய ஒன்று. எனவே இத்தகைய அமைதியை ஆண்டவனிடமிருந்து மட்டுமே பெறமுடியும். இயேசு பிறக்கும் போது ஜெருசலேம் நகர் அமைதி அற்றதாகவே இருந்தது. இச் சூழ்நிலையில் இயேசுவின் பிறப்பு அவர்களுக்குக் கொண்டு வந்த இனிப்பான செய்தி சமாதானமே.

'உன்னதங்களில் கடவுளுக்கு மகிமையும் பூவுலகில் நன்மனதோர்க்கு அமைதியும் ஆகட்டும்' என்பது எத்துணை அருமையான செய்தி கடவுள் உலகிற்குக் கொடுத்த அருட்செல்வம் இந்த அமைதியே 'நான் என் சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன், நான் தரும் சமாதானம் உலகம் தரும் சமாதானம் போல் அல்ல! என்ற இயேசுவின் மொழிகள் ஆழமானவை. ஆம்! கிறிஸ்துவின் பிறப்பு என்றாலே, அர்த்தமுள்ள அக அமைதியின் பிறப்பு என்பதே பொருள். இது மயான அமைதி அல்ல. ஆனால் மன அமைதி. ஆழ

'இறைவா, உமக்கெனவே எம்மை நீர் படைத்தீர். உம்மை வந்து அடையும் வரை எம் வாழ்வுக்கு நிம்மதியில்லை.' என்றார் புனித அகுஸ்தினார். எங்கே நிம்மதி எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும் எனத் தவித்தது தமிழ் உள்ளம். அமைதியைத் தேடி அலைந்தது போதாதோ? அருள் வழி திறந்து அடைக்கலம் தாராயோ? என ஏங்குகிறது பக்தன் உள்ளம் உண்மைதான். குறிப்பாக இந்நாட்களில் கோயில்களிலும், பரிசுத்த ஆவிக் கூட்டங்களிலும் மக்கள் கும்பலாகச் சென்று கொண்டிருப்பதையும், ஆழ்ந்த பக்தியோடு செபிப்பதையும் பார்க்கும்போது மனித வாழ்வில் அமைதியைத் தேடும் படலம் தொடர்வதையே காணமுடிகிறது. கோவில்கள், குருசடிகள், உளவியல் மருத்துவர்கள் ஞானவழிகாட்டிகள் இவர்களின் முன் கூடிக்கிடக்கும் மக்களின் கூட்டமும் இதற்குச் சான்று.

உலகம் தரும் செல்வங்கள் ஏராளம் இருந்தும் அமைதி இல்லை என்ற நிலை கசப்பான உண்மையாகும். அமைதியைத் தேடி அலைபவருள் இளைஞர் பெரும் பகுதியினர். நிலையான, நிச்சயமான அமைதிக்கு வழி

மிருந்தால் அமைதி இருக்கும். தெய்வீகத்தின் ஆழத்தில் ஆன்மா பயணம் செய்யும் போது தான் அக அமைதியைக் காண முடியும்.

குழந்தை இயேசுவை ஏற்று இதயக் கோவிலில் வாழவைக்கும் போது மனம் அமைதி பெறுகிறது. ஆனால் அவரைத் துரத்திவிடும் போது மனம் தடுமாறுகிறது. இயேசு பிறந்ததும் ஏரோது கலங்கினான். எருசலேம் முழுவதும் கலங்கியது. ஏன்? அமைதியின் மன்னன் பிறந்திருக்க அங்கலாய்க்கும் நிலை ஏன் வந்தது? சுயநலம், ஆணவம், அகந்தை போன்ற அழுக்குகள் அந்த ஏரோதையும் எருசலேமையும் ஆட்டிப்படைத்திருந்தன. இன்றும் அப்படித்தான். எங்கே ஆணவம், அகந்தை, செருக்கு இருக்கிறதோ அங்கே அமைதியின் கதிரவன் உதயம் ஆவதில்லை.

எளிய மனத்தோர் எப்போதும் அந்த அமைதியை அடையலாம். வறுமையிலும் வளமையிலும், வெற்றியிலும் தோல்வியிலும், இன்பத்திலும் துன்பத்திலும் நிலைபெறும் செல்வமே ஆண்டவன் இயேசு கொண்டு வந்த அக அமைதி. அத்தகைய அமைதியைப் பெற நாம் எல்லா உயிர்களுக்கும் அன்பு காட்ட வேண்டும். வன்முறைகளை முற்றிலும் தூக்கி எறிந்துவிட்டு இரக்க நெஞ்சம் பெற வேண்டும். சிங்கமும் கன்றும் சேர்ந்து விளையாட, ஓநாயும் செம்மறியும் சேர்ந்து நடமாட, விரியன்பாம்பின் வளையில்குழந்தை கைவிட்டு விளையாட சிங்கம் கூட வைக்கோல் தின்னக் காலம் வரும் போதுதான் இந்த உண்மையான அமைதியை அனுபவிப்போம். அன்பும் அமைதியும் விழாக்கோலம் பூணட்டும்.

வாயாடி




வண்டுமணி

சமாதானத்துக்கான யுத்தம் எண்டு அம்மாவும், அமைச்சர்களும் வாய்கிழிய சொல்லிக் கொண்டு திரியிறாங்க ஆனா நடக்கிறதெல்லாம் கொலையும், கற்பழிப்பும், கைதும், காணாமல் போறதும் தான். இந்தச் சுடலைச் சமாதானம் ஆருக்கு வேணும்? அன்பினால்தான் சமாதானம் வருமெண்டு இயேசு பிறந்து காட்டினார். இவங்க என்னெண்டா ஆயுதத்தால சமாதானத்த கொண்டுவாறம் எண்டுறாங்க! என்ன வரப் போகுதோ! இயேசுவே!

- மானா.

# நூல் அறிமுகம்



## - ஊனமுற்ற உள்ளங்கள் -

ஆசிரியர்:- அருள்திரு. K. நித்தியானந்தன்

★ என். சண்முகலிங்கன்
சமூகவியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

''இளைய தலைமுறையே ஒரு நாட்டின் முதுகெலும்பாகும். நாட்டில் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புபவர்கள் இளைஞர்களே ஆவார்கள்; ஆனால் இன்று இளைஞர்களின் எதிர்காலம் நம் நாட்டில் ஊனமாக்கப்பட்டுள்ளது......''

''அதிகரித்துவரும் வன்முறை போர்ச் சூழ்நிலைகளில், அளவுக்கதிகமான உயிர்கள் நாளாந்தம் பலியாகி வருகின்றன. பெற்றோரை இழந்து அனாதைகளாக்கப்படும் குழந்தைகள், தமது உறவுகளை இழந்து நிற்கும் மனிதர்கள், கணவனை இழந்து நிற்கும் விதவைகள்... உயிரிழப்புக்கள் மட்டுமல்லாமல் இவ்வகையான வன்முறைத் தாக்கங்களினால் நாளாந்தம் மனத்தளவால் ஊனமாக்கப்பட்டு வரும் மக்களை யாரும் கவனத்தில் எடுப்பதில்லை''

''நம்பிக்கை இழந்து வாழும் இவர்களை, வாழ்வில் தன்னம்பிக்கையுள்ளவர்களாக மாற்றுவது எப்படி என்கின்ற எண்ணமும், எனது எதிர்கால பணி இத்தகைய மக்களின் மத்தியில் இடம்பெறப் போகிறது என்ற நோக்கமும் என் உள்ளத்தில் விளைவித்த சிந்தனையே இந்த நூலை எழுதத் தூண்டியது. அதுமட்டுமல்லாமல் இத்தகைய சூழ்நிலைக்குள் நான் அனுபவித்த துயரங்களும் காண நேர்ந்த துயரக் காட்சிகளும் இந்நூல் உருவாக களமாக அமைந்தன'' என்ற

பிரகடனத்துடன், அருட்திரு. கே. நித்தியானந்தன் அவர்களின் ஆய்வு அனுபவ சாரமாக Benehannebiim வெளியீடாக அண்மையில் வெளியாகியுள்ள ஊனமுற்ற உள்ளங்கள் பற்றிய ஓர் அறிமுகக் குறிப்பு இது.

நிகழும் முரண்போர் நிலை இளைஞர்களில் விளைவித்துள்ள உள-உடலியல் பிரச்சினைகளை சமூக-இறையியல் நோக்கில் இந்நூல் ஆய்கின்றது.

இன்றைய உலகில் வன்முறையின் ஆதிக்கம். வன்முறைச் சூழ்நிலைகள் ஏற்படுத்தும் உளத்தாக்கங்கள், சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட இளைஞர்களுக்கான புனர்வாழ்வு, இளைஞர்கள் மத்தியில் திருச்சபையின் செயற்பாடு என நான்கு அத்தியாயங்களாக வகுக்கப்பட்டு.

'இருதயம் நொருங்குண்டவர்களைக் குணமாக்கவும் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை தரவும்' எனும் தமது நோக்கினை சிறப்பாக இந்நூல் பிரதி பலிக்கின்றது எனலாம்.

மிகச்சிக்கலான ஒரு பொருளை, சமூக விஞ்ஞான நோக்கோடு, இறையியல் வழியாகவும் காணவேண்டிய நிலையில், நித்தியானந்தனின் பணி மிகவும் கடினமானது. எனினும் வெறும் ஆய்வாளன் என்பதற்குமேல், சமூகப் பணியாளனாகவும், அதே சமூக அங்கத்தவ

ளாகவும் அவர் கொண்ட சமூக ஈடுபாட்டின் வழி மிகச் சிறப்பாக தமது கருத்தியலை வெளிப்படுத்த முடிந்திருக்கிறது.

'தனியொருவனுக்கு உணவில்லை யெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதியே வன்முறையை தூண்டிவிட்டதாக முதல் அத்தியாயத்தில் கோபப்படும் ஆசிரியர், இறுதி அத்தியாயத்தில் மக்கள் வீடிவுக்கான போராட்டங்களின் இன்றியமையாமையை அழுத்துகின்றமையை காணலாம். ஆய்வு நோக்கையும் மிஞ்சிய அனுபவஞானமாக இது கொள்ளப்படலாம்.

'மக்களின் விடுதலைக்காக போராடுவது கிறிஸ்துவின் போதனைக்கு எதிரானதல்ல' எனும் கருத்தினை இன்று கிறிஸ்தவ சிந்தனையில் மலர்ச்சி பெறும் விடுதலை இறையியல் சார்ந்த முற்போக்கு சிந்தனை வீச்சினை காணமுடிகிறது.

அன்று எங்கள் பல்கலைக்கழகம் கண்ட, சமாதானம் தொடர்பான ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் பலவற்றில், அருட்திரு. நித்தியானந்தனின் ஆழ்ந்த ஈடுபாட்டினை அவதானித்திருக்கின்றேன். இன்று 'சமாதானத்துக்காகப்போர்' எனும் ஊனமான ஒரு அரசியல் சூழ்நிலையில், ஊனமுற்ற உள்ளங்களுக்கு ஆறுதல் தரும் இந்த ஆக்கபூர்வமான பணிக்காய் அவர் தம்மை அர்ப்பணித்துள்ளமையை இந்நூல் சிறப்பாகவே வெளிப்படுத்துகிறது. கூடவே இப்பணிகளில் இணையும் அனைவருக்கும் சிறப்பானதோர் கைநூலாக விளங்குகின்றது.

உளவளம், உளவள ஆலோசனை, சமூகப்பணி என்பன தொடர்பான அறிவியல் நூல்கள், எங்கள் தமிழ் மொழியில் மிக அருந்தலான சங்கதிகள். மிக அண்மையில்தான் அருட் தந்தை டேமியன், பேராசிரியர் தயா சோமசுந்தரம் போன்றோரின் சில நூல்கள் வெளியாகியுள்ளன. இந்த வரிசையில் மிகவும் எளிமையான மொழிநடையில், அனைத்துச் சமூகப்பணியாளர்களுக்கும் வழிகாட்டும் நூலாக இது அமைகின்றதெனலாம்.



**தொண்டன், வாசகர்கள், எழுத்தாளர்கள் ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் நத்தார் - புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.**

**ஒளியான இயேசுவின் பிறப்பினால் இந்நாட்டில் சூழ்ந்துள்ள போரிருள் விலகி அமைதியுடனும், கௌரவத்துடனும் வாழும் நல்ல நாள் புலர்வதாக!**

**ஆசிரியர் குழுவினர்**
**- தொண்டன் -**

# ஏரோது இன்னும் வாழ்கிறான்.

▷ தமிழ்ச்செல்வன் மாசிலாமணி·

நத்தார் பெருநாளுக்கு இன்னும் நான்கு நாட்களே இருந்தன.

எட்டுத்திக்கும் நத்தார் ஆரவாரம் வியாபித்து ஓர் இனம் புரியாத மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆயினும்.. அந்த பெருந்தோட்டத்தில் மட்டும் ஒருவித ஏக்கங்களும் எதிர்பார்ப்புக்களும் புஸ்வாணங்களாகி புகைந்து கொண்டிருந்தன.

பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் வாழும் அத்தோட்டத்தில் கிறிஸ்மஸ் காலத்தில் கொடுக்கப்படும் போனஸோ பண்டிகை முற்பணமோ வேறு சலுகைகளையோ தோட்ட நிர்வாகம் இம்முறையும் இதுவரையில் கொடுக்கவேயில்லை.

போனஸையும் முற்பணத்தையும் நம்பியே பெருநாள் கொண்டாடும் தோட்ட மக்களுக்கு அது கிடைக்காதது ஏமாற்றமாகவும், கவலையாகவும் இருந்தது. இம்முறை மட்டுமா? கடந்த இரண்டு வருடங்களாகவே இது கொடுக்கப்படவில்லை. ஏதேதோ காரணங்களைக் காட்டி அடுத்த மாதம் என்றும், பின்பு தொழிலாளர்களின் உள்ளக்குமுறல்கள் ஓய்ந்தபோது வருட முடிவில்சேர்த்துக் கொடுக்கப்படுமென்றும், அதுவும் ஏமாற்றமாகிப்போகும் போது தொழிலாளர்கள் குமுறத் தொடங்கியதும், ஏதேதோ சாக்குப்போக்குச் சொல்வதும் பின்பும் ஏமாற்றமடைந்த தொழிலாளர்கள் தொழிற்சங்க மட்டத்தில் கேட்டபோது தோட்ட நிர்வாகம் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை கைப்பொம்மைகளாக ஆக்கிக் கொண்டு தோட்டம் நட்டத்தில் இயங்குவதாயும், இதை நிவர்த்தி செய்து கூடிய விரைவில் கொடுப்பனவுகளை கொடுப்பதாகவும் கூறி தொழிலாளர்களின் உள்ளக்குமுறல்களை அடக்கிவிட்டு பின்பு இதைப் பற்றிய தடயமே இல்லாமல் செய்து விடுவதும் வழக்கமாகிவிட்டது.

இவ்வருடமும் ஏமாற்றம் தானா? இப்படி உரிமைகளும் சலுகைகளும் பறிபோவதை தொழிலாளர்கள் விரும்பவில்லை.

லயத்துக்கோடியில் சிந்தனையில் மூழ்கிப் போயிருந்த தேவமணியை தட்டிவிட்டார் அருள்நாதன். சிந்தனையிலிருந்து விடுபட்ட தேவமணி அவரைப்பார்த்து வெறுமையாகச் சிரித்தான். தன்னையொரு ஆளுமையுள்ளவன் சிந்தனையுள்ளவன் வல்லவன் நல்லவன் என்றெண்ணி தன்னால் தங்களின் தொழிற் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் தன்னை தோட்டத்திற்குத் தலைவனாக்கிய தோட்ட மக்களின் நம்பிக்கை முகங்கள் அவன் கண்முன்னே படம் விரிக்கின்றன.

''தலைவர் தம்பி இந்த முறையும் ஏமாற்றி விடுவான்களோ''?

பீடியை இடதுகையால் சொறிந்தபடியே கேள்வியை எழுப்பினார் அருள்நாதன்.

''தொழிலாளர்களை ஏமாற்றுவது வஞ்சிப்பது சுரண்டுவது இது எல்லாம் முதலாளி வர்க்கத்தாருக்கு கைவந்தகலை. ஆனா நாம தான் வஞ்சிக்கப்படாம சுரண்டப்படாம இருக்கணும் அப்படித்தானே அண்ணே.''

பேச்சால் வளைத்து கெட்டியாகப் பிடித்தான் தேவமணி.

அருள்நாதன் மூளையில் ஏதோ சுர் என்று வேலை செய்தது.

## சிறுகதை

''வாஸ்த்தவம் தான் தம்பி நம்ம எழும்பாதவரை நம்ம நிலை மாறாது அத மறக்கக் கூடாது.''

சரியாய்ச் சொன்னீங்க அண்ணே. அவர் கைகளைப் பற்றிப் பிடித்து அவரைப் புகழ்ந்தான் தேவமணி.

அருள்நாதனுக்கு அறுபது வயதென்றாலும் முற்போக்கு சிந்தனையுள்ள துடிப்பான இளைஞர். இதற்குள் மைக்கல் சந்தனமும், ஏகாம்பரமும், அங்கு வந்தார்கள்.

''தலைவரே இப்ப என்ன தான் முடிவு? வந்ததும் வராததுமாய் மைக்கல் சந்தனம் தான் இப்படிக் கேட்டார்.''

''இன்னைக்கு காலையில் கூட ஆபிஸுக்குப் போய்த் தான் வந்தேன். நாளைக்கு சாயந்தரம் தருவதா தொர சொன்னாரு''என்றான் தேவமணி.

'இது வழக்கமான பேச்சு தானே தலைவரே' என்றான் ஏகாம்பரம் சலிப்போடு.

''உண்மைதான் ஏகு நாளைக்கு சாயந்தரம் வரப் பார்ப்போம். சரிவரலனா நாம அறவழிப் போராட்டத்த ஆரம்பிப்போம்''

''ஆமா .. ஆமா மூவரும் தலையாட்டினார்கள். சில பெரிய புள்ளிகளை கையில போட்டுகிட்டு தோட்ட நிர்வாகம்நம்மலநல்லாஏமாத்துது தோட்டம் நட்டமாகிறதுக்கு காரணமே இல்ல. எல்லாமே படுபொய். ஏமாற்று'' உள்ளங்குமுற வார்த்தைகள் ஊடாக வெளிப்பட்டன.

''அது அப்படியிருக்க நம்ம முதலாளி அதுதான் நம்ம பெரியதொர பலகோடி ரூபாவுக்கு கொக்கோ தோட்டம் வாங்கி இருக்குறாராம் இத நம்ம பிரதிநிதி இன்னைக்கு சொன்னாரு ''இது மைக்கல் சந்தனம்.

''பார்த்தீங்களா? நாயா உழைக்கிற நம்ம வயித்தில மண்ணைப் போட்டுட்டு அவுங்க சுகபோகம் அனுபவிக்கிறாங்க. இதமாத்தனும் இல்லேனா நாம வாழவே முடியாது'' ஏகாம்பரம் உணர்ச்சி மேலிடய பேசினான்.

'பாத்தீங்களா நம்ம விதிய'

''இதப்பத்தியெல்லாம் கவலப்படாத ஏகு. அதையெல்லாம் மாத்திடலாம். நம்ம ஒத்துழைச்சா நம்ம பக்க பலமா இருந்தா தேவமணி காலப்போக்கில் இதுக்கெல்லாம் ஒரு முடிவு கண்டிடும்'' என்றார் அருள்நாதன், மிகவும் நம்பிக்கையோடு.

உதடுவரை சிரித்துக் கொண்டான் தேவமணி. அருள்நாதனைப் போலவே தோட்ட மக்கள் அனைவரும் அவன் மீது தளராத நம்பிக்கையையும் அன்பையும் வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கைக்குப்பாத்திரமானவனாக அந்தமக்களுக்கு. அவர்கள் வாழ்வுயர, நிலையுயர தன்னலமற்ற தன்னால் இயன்ற அளவு சேவையாற்ற வேண்டும் என்பதே'அவன் இலட்சியமாகும்.

''ஏகு! நாளைக்கு நம்ம ரெண்டு பேரும் ஆபீஸுக்குப் போகனும். விஷயம் சரிவரலனா ஒரே முடிவா நாளையில் இருந்தே நம்ம அமைதிப் போராட்டத்த ஆரம்பிக்கனும். நம்ம உரிமைகளையும் சலுகைகளையும் விட்டுக் கொடுக்கக் கூடாது. அஞ்சாம தைரியமா நிற்கனும் சரியா ..?''

தேவமணியின் திடமான பேச்சு அவர்களுக்கு லேகியமாக இருந்தது.

''சரி சரி நீங்க ஒரு வார்த்த சொன்னாப் போதும் நாங்க மட்டுமில்ல இந்த தோட்டமே உங்க பின்னுக்கு நிற்கும் என்றபடியே தேவமணியின் கையைப்பிடித்து உறுதியளித்தான்.

அடுத்த நாள் காலை தோட்ட அலுவலகத்தில் நெடுநேரம் தோட்ட நிர்வாகியின வரவுக்காக காத்திருந்த தோட்டக்கமிட்டித் தலைவர் தேவமணியும் செயலாளர் ஏகாம்பரமும் துரையைக் கண்டதும் சுறுசுறுப் படைந்தனர்.

''சலாங்க தொர...'' இருவரின் வலது கைகளும் நெற்றிப் பொட்டை தொட்டு நழுவி மார்பில் வந்து நின்றது.

''எங்க வந்தது?''

அதிகாரியின் வழமையான அஃறிணைக் கேள்வி.

''தொர பெருநாளுக்கு இன்னும் மூன்று நாள்தாங்க இருக்கு'' தேவமணி பணிவாக நினைவு படுத்தினான்.

இதற்குள் காற்சட்டைப் பையில் கையைவிட்டு சிகரெட் பெக்கட்டை எடுத்து அநாயாசமாக ஒன்றை உருவி, உதடுகளில் பொருத்திக் கொண்டு பின்பு லைட்டரை எடுத்து குலுக்லொவகமாகசிகரெட்டைப் பற்றிக் கொண்டு ஒரு அலட்சியப் பாவனையோடு, புகையை இழுத்தப்போது, ''சலாம்'' செய்து கொண்டு அந்த வழியாகச் சென்ற அவரது ரைவரை ஏறிட்டுப்பார்த்து சற்று கடூரமாக 'டிரைவர்' என்றார். அடுத்த நிமிடமே பெட்டிப் பாம்பாய் அருகில் வந்து நின்றார் டிரைவர்.

பெஜெரோவுல தொரசாமியோட டவுனுக்கு போய் கிறிஸ்மஸ் சாமானெல்லாம் எடுத்து வரனும். அத்தோடு கிறிஸ்மஸ் பாட்டிக்கு தேவையான சாமான்களும் வாங்கனும் அப்புவையும் கூட்டிப் போகணும் தெரியுதா.

''நல்லதுங்க தொர'' இது டிறைவர்.

''டிறைவர் விக்டோரியா லிக்கர் சொப்பில இரண்டு கேஸ் வீஎஸ்ஓ தருவாங்க. அத கவனமா கொண்டு வரணும் தெரியுதா? அதிகாரத் தோரணையுடன் கூடிய கட்டளை இது. அடக்கமாக 'ஆமா சாமி' என்று தலையாட்டியபடியே பங்களாவை நோக்கி விரைந்தான் டிரைவர்.

வாயில் அரைவாசியாக புகைத்துக் கொண்டிருந்த 'கோல்ட்லீவ்' சிகரெட்டை எடுத்து தரையில் போட்டு வலதுகால் சப்பாத்தால் அரக்கத்தனமாய் தேய்த்த துரை தேவமணியையும் ஏகாம்பரத்தையும் கனல் கக்கப் பார்த்தார். அது அடேய் உங்களையும் இப்படி கீழே போட்டு மிதித்து 'விடுவேன்' என்பது போல் இருந்தது.

இருவரும் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள். 'சரி! இப்ப என்னா?' அதே தோரணையில துரை. தேவமணி மீண்டும் தான் சொன்னதையே தொடர்ந்தான். தொர பெருநாளுக்கு இன்னும் மூணு நாளுதான் இருக்கு. எங்க போனஸ் அட்வான்ஸ் எல்லாத்தையும் தாரமுனு சொன்னிங்க அது தான் எத்தன மணிக்கு தரப்போரீங்கனு கேட்டுட்டு போகலாமீனு வந்தோம்.

துரையின் முகம் குப்பென சிவந்தது. கோபம் கொப்பளிக்க என்னா போனஸ் அட்வான்ஸ் போ போ. தோட்டம் லொஸ் அது எல்லாம் சிங்கள பெருநாளுக்கு பார்க்கலாம்' என்று ஆவேசத்தோட உள்ளே செல்ல ஓரடி எடுத்து வைத்த அவரை' 'தொர' என்ற அழுத்தமான ஆக்ரோஸமான குரல் தடுத்து நிறுத்தியது.

'தொர நாங்க போறோம் ஆனா எங்களச் சுரண்டி எங்கள வஞ்சித்து வாழ நினைக்கிற உங்களுக்கு ஒரு பாடம் புகட்டத்தான் போறோம். அதுவும் அற வழிப் போராட்டம் மூலம். பாவிகளை அநாதைகளை மீட்க இந்த உலகத்துலமனிதனாகி உடலையும் உயிரையும் அர்ப்பணித்த யேசுபெருமான் பிறந்த ஒளியின் நாளில இருந்தாலாவது எங்கள் வாழ்வு மலரட்டும் ஒளி பிறக்கட்டும் நாங்கபோறோம்'

முஷ்டியை அசைத்துக் காட்டியபடியே விர்ரென்று நடந்தார்கள். துரை விக்கித்து நின்றார்.

மாலையில் பிள்ளை காம்பிராவில் தோட்டக்கமிட்டி கூட்டம் கூடியபோது தோட்டத்திலுள்ள அனைத்து ஆண்களும் பெரும்பாலான பெண்களும் ஒரு இலட்சிய நோக்கோடு ஒன்று கூடினர்.

தேவமணி தலைமைதாங்கி உணர்ச்சி ததும்ப பேசினான் அப்பேச்சில் தாங்கள் வஞ்சிக்கப்படுவதையும், ஏமாற்றப்படுவதையும் தோட்டம் நஷ்டமென்று கூறுவது படுபொய் எனவும் இப்படி தங்களை ஏமாற்றி விட்டு வெளிநாட்டில் பலகோடி ரூபா கணக்கில் தோட்டத் துரை பங்களாக்கள் தோட்டங்கள் வாங்கியிருப்பதையும் அக்கு வேறு ஆணி வேறாக பிட்டு வைத்த போது மக்கள் உண்மையறிந்து கொதித்தெழுந்தார்கள்.

இடையில் பேசிய ஏகாம்பரம், மைக்கல்சந்தனம், அருள்நாதன் ஆகியோரும் ஒற்றுமையை வலியுறுத்தி இனியும் தாங்கள் ஏமாறக்

கூடாது சுரண்டப்பட இடங் கொடுக்க கூடாது தமது சக்தியை உணர்ந்து செயற் பட வேண்டும் என்றும் உல கத்துக்கு இரட்சிப்பைக் கொடுக்க வந்த யேசு பிறப் புக் காலத்தில் நாம் இதை சிந்தித்து செயற்பட வேண் டும் என்றார்கள்.

அதுவரை அனைவரின் பேச்சுக்களையும் நடவடிக் கைககளையும் பிள்ளை காம்பி ராவின் பின்புறத்திலுள்ள மானாப்புல் புதருக்குள்ளி ருந்து மிகக் கவனமாக உள் ளத்தில் பதித்துக் கொண்டி ருந்த காவற்காரன் ஜோசப் சத்தமில்லாமல் பதுங்கிப் பதுங்கி பங்களாவை நோக்கி ஓடி அவனுக்காக காத்தி ருந்த துரையிடம் மேல்மூச்சி கீழ்மூச்சி வாங்க அனைத் தையும் அப்படியே ஒப்புவித் தான்.

பின்விளைவுகளையே மறந் திருந்த துரை தடுமாறிப் போனார். பின்பு தன்னை சுதாரித்துக் கொண்டுஅவனி டம் ஒரு ஒப்பந்தமும் செய்து கொண்டு தனது திட்டத்தையும் கூறி உடன் செயற்படும்படி அனுப்பினார்

திட்டமிட்டபடி மறுநாள் போராட்டம்ஆரம்பமாகியது எவரும் எந்த வேலைக்கும் போகவில்லை தோட்டமே ஸ்தம்பிதமடைந்தது. காவற் காரனின் துணையோடு போராட்டத்தை மழுங்க வைக்கப் போட்டதிட்டங்கள் படுதோல்வியடைந்தன.

தொழிற்காரியாலயத்தில் இருந்தும் தொழிற் சங்கங் களிலிருந்தும் வரும் தொலை பேசிகள் தொழிலாளர் சட் டங்களைத் தெளிவுபடுத்தி, தொழிலாளர்களின் உரிமைப் போராட்டத்தை நியாயப் படுத்தி உடனே கொடுப்பனவு களைக் கொடுத்து சுமுக நிலையை ஏற்படுத்தும்படி பயங்காட்டின,

துரை தலையைப் பிய்த்து கொண்டார். இப்படி நடக் கும் என்று கனவிலும் நினைக் கவில்லை. இதற்கெல்லாம் காரண கர்த்தா தேவமணி தான் என்று நினைத்தபோது அவரது சர்வ அங்கங்களும் துடித்தன.

ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் குப்புற விழுந்தா லும் மீசையில் மண் ஒட்ட வில்லை என்பதற்கிணங்க நீதிக்கு தலைவணங்குவதாகக் கூறி கொடுப்பனவுகளை அன்று பகலே கொடுப்பதாக உறுதி அளித்து அப் படியே செய்தார் துரை.

தங்களின் போராட்ட வெற்றியை எண்ணி தொழி லாளர்கள் பெருமிதம் கொண் டார்கள்.

எங்கும் மகிழ்ச்சி ஆரவாரம் தேவமணியை பலவிதமாய் புகழ்ந்தார்கள். நத்தார் விழா அந்த தோட்டத்திலும் களைகட்டத் தொடங்கியது.

அடுத்தநாள் நத்தார் விழா கொடுப்பனவு கிடைத்த மகிழ்ச்சியிலும் மறுநாள் நத் தார் விழா கொண்டாட வேண்டியதாலும் தோட்டத் திலிருந்து சில மைல்களுக்கு அப்பாலுள்ள பட்டணத்திற் குப் பொருட்கள் வாங்க மக் கள் படை எடுத்தனர். அவ் விதமே தேவமணியும் ஏகாம் பரமும் பொருட்களை வாங் கிக் கொண்டு தங்கள் தொழிற்சங்க அலுவலகத்தில் பல முக்கிய வேலைகள் இருப் பதாயும் அவைகளையும் முடித்துக் கொண்டு வசதிப் பட்டால் வந்து விடுவதாயும் இல்லையேல் விடியற்காலை யிலே வந்துவிடுவதாயும் கூறி பட்டணம் சென்றார்கள்.

இவைகளையெல்லாம் காவற்காரன் மூலம் அறிந்த துரை, பெருநாளுக்குத்தான் கொழும்புக்கு போவதாய் புரளி கிளப்பிவிட்டு அவர் களைப் பின் தொடர்ந்தார்.

பெருநாளை முன்னிட்டு தொழிற்சங்க அலுவலகம் மூடப்பட்டிருப்பதை அறிந்து பொருட்களை வாங்கிக் கொண்டு திரும்பும் போது நன்றாக இருட்டி விட்டது. தேவமணியும் ஏகாம்பரமும் மூட்டைகளைத் தூக்கி கொண்டு நடந்து வருவதை பட்டணத்திலுள்ள எடுபிடி களோடு கவனித்துக் கொண் டிருந்த துரை திட்டத்தை செயற்பட வைத்தார். இப்

---

**மனிதப் பிறவியே சிரித்து மகிழ்வதற்காகத் தான் முகத்தை வாழைப்பூ மாதிரி தொங்கப் போட்டுக் கொண்டிருக்கக் கூடாது. சூரியகாந்தி மாதிரி மலர்ச் சியாக வைத்துக் கொள்ள வேண்டும்.**

---

**போவது சரியான பாதையாக இல்லாதபோது வேகமாக ஓடுவதால் என்ன பயன்?**

- ஜெர்மன் பழமொழி

போது மழை இலேசாய் பெய்து கொண்டிருந்தது. மார்கழி மாதத்துக்குரிய இருள் வேறு ஏகாம்பரம் வைத்திருந்த சிறிய குடையுள் இருவரும் ஒருவரைஒருவர் ஒட்டினாற்போல் வந்து கொண்டிருந்தார்கள்.

பட்டணத்தைக் கடந்து சுமார் அரைமைலுக்கு அப்பால் தங்கள் தோட்டத்துக் குப் பிரியும் பாதையில் அவர்கள் இருவரும் கலகலப்பாக பேசிக் கொண்டு வந்தபோது

சகதியை வாரி இறைத்துக் கொண்டு வேகமாக வந்த வாகனம் ஒன்று சற்றும் எதிர்பாராமல் அவர்கள் பக்கம் திரும்ப ஏகாம்பரம் வயலுக்குள் பாய தேவமணி திரும்புவதற்குள், கிரிச்! தடார்!! ''அம்.........மா'' ஒரே ஒரு நிமிடம் சுருண்டு விழுந்த தேவமணி இரத்த வெள்ளத்தில் மிதந்தான். வயலுக்குள் பாய்ந்த ஏகாம்பரம் கால் முறிந்து நீண்ட மயக்கத்தில் கிடந்தார்.

**விடிந்தது......**

எங்கும் நத்தார் குதூகலம் மகிழ்ச்சி, பட்டணத்தில் கடை ஒன்றில் வேலை செய்யும் அந்தோனி பெருநாள் விடுமுறை எடுத்துக் கொண்டு குடும்பத்தோடு திருப்பலிப் பூசைக்கு போக வேண்டும் என்று அவசரத்தில் விடிந்ததும் ஓடிவந்தவன், அழுது புலம்பிக் கொண்டு சம்பவத்தை சொன்னான்.

அனைவரும் வாரிச் சுருட்டிக் கொண்டு ஒப்பாரியோடு சம்பவம் நடந்துள்ள இடத்திற்கு ஓடினார்கள்.

**அங்கே!**

உறைந்து போன இரத்த வெள்ளத்தில் பிதுங்கிய விழிகளோடு பரிதாபமாய் கிடந்தான் தேவமணி.

மயக்கம் தெளிந்த ஏகாம்பரத்தை தூக்கி வந்தார்கள். நடந்த சம்பவங்களை கூறிக் கொண்டிருந்தான்.

கூட்டங்கூட்டமாக மக்கள் அங்கு கூடி விட்டார்கள். அந்தக் கூட்டத்தோடு கூட்டமாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த துரை ஏகாம்பரம் பிழைத்துக் கொண்டதைக் கண்டு துணுக்குற்றான் ஒரே அழுகையும் விம்மலும் ஒப்பாரியுமான அந்த இடத்தில்அதையும் மீறிக்கொண்டு அருள்நாதன் பேசினான்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு இதே தினத்தில் உலக மீட்பர் யேசு நமக்காக மனுஷனாகப் பொறந்தாரு அப்ப தன்னை விட அரசன் ஒருவன் பிறந்திருப்பதாய் எண்ணி ஒருவயசுள்ள கொழந்தைகளை எல்லாம் வெட்டிக் கொல்லும் படி கட்டளையிட்டான். ஏரோது அரசன். இன்று நமக்காக உழைக்க வந்த தேவமணிங்கிற இந்த கொழந்தையையும் கொண்டிருக்கிறது ஒரு ஏரோது தான் ஆக ஏரோது இன்னும்நம்மத்தியில்வாழ்ந்து கிட்டுத்தான் இருக்கான். இது விபத்து இல்ல ஆனா ...... தர்மத்தையும் நீதியையும் கொன்று போட முடியாது சந்தர்ப்ப வசத்தால் நீதி புதைக்கப்படலாம். ஆனா ஒரு நாள் உயிர்பெற்று எழும் பத்தான் போகுது. அனைவரினதும் சுட்டு விரல்களும் அந்த பங்களா நோக்கி நீண்டன.

துரை விக்கித்து நின்றார் கிழக்கு வானிலே தோன்றிய பேரொளி அவர்களுக்கு ஆறு தலையும் மேலான நம்பிக்கையையும் கொடுத்தது.

''உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை, பூமியிலே நல்ல மனதோருக்கு அமைதியும் சமாதானமும்'' என்ற நத்தார் கீதம் எங்கோ ஒலித்துக் கொண்டிருந்தது.

(யாவும் கற்பனையே)

---

இன்பம் ஒரு பாவம்;
சில சமயங்களில் பாவமும்
இன்பமாக இருக்கிறது.

- பைரன்

---

# இலக்கிய மஞ்சரி

— எஸ். மோசேஸ் —

## கதிர்ப்பு

- கல்முனை கதிர்ப்புகலைக்கழகம் 'கதிர்ப்பு என்னும் சஞ்சிகை ஒன்றை கடந்த நவம்பர் 10ம் நாள் வெளியிட்டது. கிழக்குப் பிரதேசத்தில் கலை இலக்கிய முயற்சிகளில் எப்போதும் துடிப்புடன் இயங்கி வரும் கல்முனைப் பிரதேசத்தின் மற்றுமொரு முயற்சி கதிர்ப்பு.

திரு. வ. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ''கதிர்ப்பு'' வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக அருள் தந்தை T.பயஸ் பத்மராஜா அவர்களும் சிறப்பு அதிதியாக அருட் சகோதரர் S- A. 1. மத்தீயு அவர்களும் கலந்து கொண்டனர். வெளியீட்டுரையை திரு. உமா வரதராஜன் நிகழ்த்தினார்.

பெற்றுக் கொள்ள:-

ஆசிரியர் கதிர்ப்பு
நியூராணி ஸ்ருடியோ,
கல்முனை 01.

- 96 - 11 - 02ந் திகதி சனிக்கிழமை ஆனைப்பந்தி மகளிர் மகா வித்தியாலத்தில் - புலவர்மணி நினைவுப் பணி மன்றம் ஏற்பாடு செய்த - புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையின் 18வது நினைவு தின வைபவம் - தலைவர் கே. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்றது. -இராமகிருஸ்ணமிஷன் சுவாமி ஸ்ரீமத் ஜீவானாநந்தா பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார் - கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் க. நடராசா நினைவுப் பேருரை நிகழ்த்தினார் - மேற்படி வித்தியாலய மாணவிகளின் தமிழ் வாழ்த்தும் - இசைப் பேரரசு என் ராஜூ கலாசூரி வீ.வினாயகமூர்த்தி ஆகியோர் கவிதாஞ்சலி நிகழ்த்தினர். மாணவிகளின் - பரதநாட்டியமும் இடம் பெற்றது.

- ஒக்டோபர் 27 ஞாயிறு சார்ஸ் மண்டபத்தில் மறைந்த பிரபல விமர்சகர் வி. ஆனந்தன் அவர்களின் நினைவாக மட்டக்களப்பு வாசகர் வட்டத்தினால் நினைவுப் பேருரை நடாத்தப்பட்டது- தலைமை-அதிபர் மு. இராசரெத்தினம் கருத்துரை பிரபல பத்திரிகையாளர். டி. சிவராம் - தலைப்பு :- இலங்கையின் பத்திரிகைத்துறையும் சில போக்குகளும்'' - நன்றியுரை அ. மகாதேவா

- 20 - 10 - 96 ஞாயிறு வாசகர் வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகக் கலைஞர் எதிரிவீர சரச்சந்திர நினைவுப் பேருரை நடைபெற்றது. கருத்துரை :- கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசார பீடாதிபதி கலாநிதி சி. மௌனகுருவால் நிகழ்த்தப்பட்டது.

- கிழக்குப் பல்கலைக் கழக தமிழ்ச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட '' தமிழ்ச் சங்க விழா '' 06 - 11 - 96 அன்று பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் 'கவிதை மொழிதல்' 'மேடை நாடகம்' என்பன இடம் பெற்றன.

மேடை நாடகம் : 'கருஞ்சுழி' (நவீன நாடகம்) நெறியாள்கை - பாலசுகுமார் கவிதை மொழிதல்-மைக்கல் கொலினின் தலைமையில் பிரியா, மலர்ச்செல்வன், மோசேஸ், கிருபா, மகேந்திரன் ஆகியோர் கவிதை மொழிந்தனர்.

- கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறை விரிவுரையாளர் பாலசுகுமாரின் வழிகாட்டலில் 30 மாணவர்களை உள்ளடக்கிய இருவாரகால நாடகப் பயிற்சிப் பட்டறை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சென்ற 18 - 11 - 96 அன்று கலை கலாசார பீடாதிபதி கலாநிதி சீ.மௌனகுரு அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது பயிற்சிப் பட்டறை நடைபெறுகின்றது.

பயிற்சியளிப்பவர்கள் - விரிவுரையாளர்களான திரு. பாலசுகுமார் திரு. சிவரெத்தினம், திரு. இன்பமோகன் திரு. தயானந்தன் ஆகியோராவர்.

# மறைந்தும் மறையாத விமர்சகர் வீ. ஆனந்தன்

கிழக்குப் பிரதேச இலக்கிய நெஞ்சங்களில் ஆழப் பதிந்த பெயர் ஆனந்தன். இப்பிரதேசத்தின் இலக்கிய முயற்சிகளுக்கும், வளர்ச்சிக்கும் உயிர்த்துடிப்புடன் பங்காற்றிய அவரது மறைவு அகன்ற வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது உண்மை அவரது பணியின் பாரம் மறைவுக்குப்பின் இன்னும் அதிகமாகவே தெரிகிறது. இலக்கியப் பணியாளன் மட்டுமல்ல, இதயங்களைப் புரிந்து மதிக்கத் தெரிந்த பண்பாளனும் கூட. அன்னாரது அகால மறைவின் ஓராண்டு நிறைவை ஒட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

இ. ஆ.

● மு. இராசரத்தினம்

மரணம் என்பது மயில் இறகை உதிர்ப்பது போல் ஓர் அற்பமானது தான். ஆனால் சிலரது மரணங்களை அவ்வாறு ஒதுக்கி விடமுடியாது. ஒதுக்க முடியாதவர்களுள் ஒருவர் தான் அமரர் வீ.ஆனந்தன். கவிவளம் மிக்க கரவாகுப்பற்றிலே சம்மாந்துறை நாற்றங்காலில் முளைத்து இலக்கிய மணம் பரப்பிய ஆனந்தனின் உறவுகள் மூவர் மருத்துவம் மாந்திரீகம் என்பவற்றில் சிறந்து விளங்கிய வேலுப்பிள்ளை தந்தை, மாரிமுத்து தாய், மட்டக்களப்பு பார்வீதியைச் சேர்ந்த வத்சலா மனைவி. ஆனால் நடத்தையால், சொல்லால், செயலால். ஆழ்ந்த அறிவால் மேலோர் கீழோர் எனப் பாராது மனிதர்கள் அனைவரையும் உறவென நினைத்தவன் வீ. ஆனந்தன். இக்கட்டுரை அவனைப்பற்றிய ஓர் ஆய்வன்று, அறிமுகம் மட்டுமே.

சம்மாந்துறை மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற ஆனந்தன் மாணவப் பருவத்திலேயே பலரையும் கவர்ந்தவன். அபார ஆற்றல்களைக் கொண்டிருந்த ஆனந்தனை இனங்கண்டு கொண்ட அவனது ஆசிரியரான ஜனாப் பசீல் காரியப்பரும் அவனது நண்பர் குழாமும் கொடுத்த ஊக்கமும் உற்சாகமும் ஆனந்தனின் உருவாக்கத்தில் தாக்கம் புரிந்தமையை அவன் வாயாலேயே கேட்டுள்ளேன்.

கையெழுத்துப் பத்திரிகை நடாத்தல், கவிதை எழுதுதல், என்பவற்றில் மிக்க ஆர்வம் கொண்டிருந்த ஆனந்தனிற்கு சிந்தாமணிப் பத்திரிகையின் சிறுவர் பக்கம் இடம் கொடுத்து ஊக்குவித்தது. கால ஓட்டத்தில் கவிஞனாக, விமர்சகனாக, ஆழமான வாசகனாக, சிறந்த (மலையாளத்தின் வழி தமிழுக்கு) மொழி பெயர்ப்பாளனாக ஏகலைவத் தேடலுடன் வீச்சாக எழுந்து நின்றவன் வீ.ஆனந்தன் என்னும் விமர்சனப் புயல்.

அடக்கம், எளிமை, கருணை, மனிதநேயம் என்பவற்றின் மொத்த வடிவமாக விளங்கியவன். சாதி, மதம், மொழி, நிறம், பணம், கல்வி இவற்றால் தாமே உயர்ந்தவர் எனக் காட்டிக் கொள்ள எத்தனிக்கும் போலிகளைப் போலன்றிச் சேவையால் தன் தேவையை நிலை நிறுத்தியவன்.

ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளைக் கற்கும் வாய்ப்பு இருந்த போதிலும் அவற்றைக் காட்டிலும் சிறந்ததாக மலையாள மொழியைத் தேர்ந்து கற்றுப்புலமை பெற்றான். அதற்கு அவனால் மொழி பெயர்க்கப்பட்டு வெளியான 19 சிறுகதைகளுமே தக்க சான்றுகளாகும். மலையாளக்கலாலயம், கேரள நண்பர்கள் ஜனார்த்தனன் (வுட்லன்ஸ்) முதலாளி, சுவாமி ராஜேஸ்வரானந்தர் ஆகியோர் மலையாள நூல்களைப் பெற்றுக் கொள்வதில் ஆனந்தனுக்கு உதவினர். மலையாளத்தை இவ்வளவு கரிசனையுடன் கற்றதற்கான காரணம் என்ன? புதிய விடயங்

கள் எப்போதும் காலம் தாழ்த்தியே தமிழில் வெளிவருவதும் முன் கூட்டியே மலையாளத்தில் வெளியாவதும்' தான். உலகின்புறுவது கண்டு தான் இன்புறும் பண்பாளனான ஆனந்தன் தான் அறிந்தவற்றை எல்லாம் நண்பர்களுக்குக் கூறி மற்றவர்களையும் வாசிக்கத்தூண்டுபவன்.

மாக்சிச அடிப்படையில் நின்று விமர்சனத்தை மேற்கொண்டவன் வி.ஆனந்தன். ஆரம்பகாலத்தில் சண்முகதாசன் அணியின் ஓர் உறுப்பினனாக விளங்கிய ஆனந்தன் இறுதிவரை அவ்வாறே வாழ்ந்து காட்டியவன் இலக்கியம் சமூகமாற்றத்தை ஏற்படுத்தாது, அரசியல் தான் அதைச் செய்ய வேண்டும் இலக்கியம் அதற்குத் துணை செய்யும் என்பதை எப்பொழுதும் அவன் வலியுறுத்தியே வந்துள்ளான்.

நாட்டாரியல் முதல் நவீன இலக்கியங்கள் வரை எல்லாக் கலைகளையும் நேசித்தான். கலையையும் கலைஞனையும் இரு கண்களாகக் கருதினான். எதையும் கூர்ந்து நோக்கும் இயல்பு இவனது உடன் பிறப்பு. அதனால் தரமற்ற படைப்புகளை ஊதித் தள்ளி விடுவான். தரமான எழுத்துக்காக எதிரியைப் பாராட்டவும் தரமற்ற படைப்புக்காக நண்பனை விமர்சிக்கவும் தயங்காதவன். அவன் ஒரு விமர்சன விளக்கு.

கவிதை எழுதுவது அவனுக்குப் பிரியமானது. விவிலியத்தில் ஆனந்தனுக்கு விசாலமான அறிவிருந்தது. அவன் எழுதிய பல கவிதைகளில் அவற்றைக் காணலாம். உதாரணத்துக்கு

நச்சு மரங்களும் கோடரிகளும்
நாட்டிலிருப்பதை நாமறிவோம்
நல்லகனிகளை தந்தமரங்கட்கு
நாசம் வருமெனும் சேதியறிவோம் ஒன்றே
போதுமானது.

''அதர்மம் நாட்டில் அதிகரிக்கும் போது கண்ணன் மட்டுமல்ல கவிஞனும் பிறப்பான்" என்பது அதர்மத்தாலேயே அழிக்கப்பட்ட ஆனந்தனின் வரிகள்.

இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய இரு மதங்களிலும் நிறைவான அறிவுடையவனாக விளங்கிய ஆனந்தனின் மதம் மனிதநேயம், அவனதுவழிபாடு சமூகசேவை அவனது மந்திரம் வாசிப்பு. அதனால்அறிவாளியாகமட்டுமன்றி உணர்ச்சியுள்ள மனிதனாகவும் விளங்கினான். அம்பாறை மாவட்டத்தில் நகரசுத்தித் தொழிலாளிகளின் மேம்பாட்டுக்காகவும் வாழ்விடத்துக்காகவும் பாடுபட்டதன் பயனே உதயநகர் என்ற கிராமத்தின் உதயம். இருளில் இருப்போரை ஒளிக்கு இட்டுச் செல்ல உழைத்தவர்களுடன் இணைந்து பாடுபட்டதன் பயனை இன்று ''தரிசனம்' விழிப்புலனற்றோர் பாடசாலை நிரூபித்துக் கொண்டிருக்கின்றது.

மட்டக்களப்பு வாசகர் வட்டத்தின் தோற்றத்துடனேயே விமர்சகர் வி. ஆனந்தனை இங்குள்ள இலக்கிய ஆர்வலர்கள் அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. தேக்கமுற்றிருந்த மட்டக்களப்பின் இலக்கியத்தில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட வாசகர் வட்டத்தின் நோக்கும், போக்கும் ஆனந்தனை அதனுடன் இணைந்து கொள்ள வைத்தது. அவனது வருகையால் தேங்கிக்கிடந்த மட்டக்களப்பின் இலக்கியம் இயக்கம் பெற்றது என்றால் மிகையன்று.

பல்கலைக் கழகத்துக்குச் செல்லாவிட்டாலும் பல்கலைக் கழகங்கள் அவனைப் பயன்படுத்திக்கொண்டன. ஆய்வு மாணவர்கள் பலருக்கு ஆசிரியனாக இருந்துள்ளான் விரிவுரையாளர்கள் தம் ஆய்வுகளை மேற்கொள்ள உற்ற துணையாக நின்று உதவியுள்ளான். இத்தனைக்கும் மேலாக பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகும் பல ஏழை மாணவர்கள் கல்வியைத் தொடரத் தன்னால் ஆன எல்லா உதவிகளையுமே செய்துள்ளான். இவற்றிற்கான உயிருள்ள சாட்சிகள் பலர் இன்றும் நம் மத்தியில் உள்ளனர்.

ஆழ்ந்த புலமையும், அகலித்த பார்வையும், பரந்துபட்ட அறிவும் கொண்ட ஆனந்தனைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். மழுங்கிய மூளைகளுக்குச் சாணைபிடிப்பவனாக அவன் விளங்கினான். அவனை ஆழமான வாசகன் என்பதை விட மிகச் சிறந்த நூலகம் எனலாம். கைதட்டல் பெறுவதற்காக மேடையேறுபவனல்லன் ஆனந்தன், வழி தெரியாதவர்களை நெறிப்படுத்துவதே அவனது நோக்கம்.

1995 மார்கழி 5ம் நாள் மட்/புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற இனவாதப் போரின் இடையிலே அகப்பட்ட அவன் தன்னை நம்பி வந்த மாணவியைக் காப்பாற்றுவதற்காகத் தன்னுயிரையே ஈந்தான். யுத்த அரக்கனின் துப்பாக்கி ரவை அவன் குருதியைச் சுவைத்த வேளையிலும் சுட்டவனின் அறியாமையை எண்ணி புன்னகையே புரிந்திருப்பான். ஆனந்தனின் மறைவு இப்பிரதேசத்தின் கலை இலக்கியத் துறைக்குப் பேரிழப்பேயாகும்.

# இடர்பாடுகள் மத்தியில் இறைவனின் சமூகம்

● அருள் திரு. K. நித்தியானந்தன்

- சென்ற இதழ் தொடர்ச்சி.

புதிய ஏற்பாட்டிலே இறைவன் பாவிகளுக்காய் பூமியிலே பிறப்பதை, அவர்களுக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்வதைக் காணலாம். பழைய ஏற்பாட்டை விட புதிய ஏற்பாடு பூமியில் பாடுபடுகின்ற இறைவனை எமக்கு அறிமுகப்படுத்துகின்றது. இயேசுவாக பூமியில் வந்துதித்த இறைவன் தன் வாழ்வில் பெரும் பாகத்தையும் பணியையும் உரிமைகள் மறுக்கப்பட்ட ஏனையவர்களால் உதாசீனம் செய்யப்பட்டவர்களுடன் கழிப்பதை நாம் காணலாம். ''பாவிகள்'' என யார் யார் ஒதுக்கி வைக்கப்பட்டனரோ அவர்களுடன் இறைவன் தன்னை இனங் காட்டுகிறார். சமயநெறிகளைச் சரிவரக் கடைப்பிடிக்க முடியாமல் திண்டாடிய சாதாரண நிலையிலிருந்த யூத மக்களே அங்கு 'பாவிகள்' என புறக்கணிக்கப்பட்டனர். மதரீதியில் யூதர்களுக்குள் எழுந்த இந்த உரிமை மறுப்பை ஒடுக்குதலை எதிர்த்துக் குரல் கொடுத்தார். அத்துடன் ரோம அரசினாலும் அவர்களது அடிவருடிகளான யூத உயர்மட்டத்தினர்களாலும் சாதாரண மக்களுக்கு விளைவிக்கப்பட்ட துன்பநிலைக்காகவும் அநீதிகளுக்காகவும் இறைமைந்தன் இயேசு குரல் எழுப்பினார். யூத இனத்தவர்களாக இருந்தும் திருமண உறவுகளினாலே இனங் கலந்துவிட்ட சமாரியர்கள் 'தூய்மையற்ற மக்கள்' என யூதர்களால் புறக்கணிக்கப்பட்டிருந்த வேளை இயேசு உரிமைகள் மறுக்கப்பட்ட சமாரியர்களின் மத்தியில் அதிக காலத்தைச் செலவிட்டார் என்று காணலாம். அத்தோடு கூடவே சமூக கால நடைமுறைகளினால் புறந்தள்ளப்பட்டிருந்த தொழுநோயாளர் பிசாசு பிடித்தவர்கள், மனநோயாளிகள் என்பவர்களை ஆதரவுடன் அணுகி, அவர்களைப் பீடித்திருந்த கட்டுகளிலிருந்து விடுதலையை மட்டுமல்ல அவர்கள் இழந்துவிட்ட சமய அங்கீகாரத்தையும் அளித்தார். (லூக் 8 : 38 - 39) இச்சம்பவங்களெல்லாம் இறைவன் எமக்குத் தூரமானவரல்ல. அவர் மக்களோடே வாழ்பவர். மக்களுடன் சேர்ந்து துன்பம் அனுபவிப்பவர். என்பதைக் காட்டுகின்றன. இயேசுவின் வாய் மொழிகளாக அவை மிளிர்கின்றன. மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பலபாடுகள் பட்டு எனும் வார்த்தைகள் (மத். 16:21) சமய அரசியல் உயர்மட்டத்தினரால் சாதாரண மக்கள் அனுபவிக்கும் சித்திரவதைகளையும் அந்த மக்களோடு மக்களுக்காக இறைவனும் பாடுபடுகிறார் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றன.

இயேசுவானவரின் காலத்தின் பின்பு அவரது பாதையைக் கைக்கொண்ட கிறிஸ்தவ சமூகம் யூதமதத் தலைவர்களாலும் ரோம ஆட்சியாளர்களினாலும் பலத்த நெருக்கடிக்குள்ளாகின்றது. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் எனும் ஒரே காரணத்திற்காகப் பலர் கொல்லப்பட்டனர். இந்த வேளையில் இவ்வாறான அநியாய மரணங்களுக்குள்ளானவர்களின் நிலை என்ன எனும் கேள்வி மக்களை உலுக்கியது. இந்த வேளையிலேயே மக்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காகவும், இறைவன் மக்களுக்காக பாடுபடுகிறார் என்பதனை நற்செய்தியாக எழுதத் தொடங்கினர். இதன் பிரகாரம் துன்புறுத்தல் காலமான கி. பி. 67 - 70 காலப்பகுதியில் மத்தேயு சுவிஷேசம் துன்புறுத்தலுக்குள்ளாகி மனமொடிந்து வாழ்ந்த யூதர்களுக்காக எழுதப்பட்டது. இந்த நற்செய்தி நூலில்

நாம் பாக்கிய வசனங்களைக் காண்கிறோம். மத்தேயு 5ம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் திருவார்த்தைகளாக இவை தரப்பட்டுள்ளன. இறைவனோடு வாழ்கின்றவர்கள் யாரெனில் இவ்வுலகில் பலவித சமூக ஒடுக்குதலுக்குள்ளாகுவோர், சமூகநீதியை நிலை நிறுத்துவதற்காகத் தம் உயிரைப் பொருட்படுத்தாது பாடுபடுவோர், ஏழ்மை நிலையில் வாழ்வோர் ஆகியோராவர். இப்படி இவ்வுலகில் பாடுகளை இடர்களை அனுபவிப்போராக வாழ்வோரே இறைவனின் சமூகத்தில் பசியற்றோராக, கண்ணீரற்றோராக, தாகமடையாதோராக சந்தோஷத்துடன் இறைவனைத் துதிப்பார்கள். (வெளி. 7: 9-17) மிகுந்த உபத்திரவத்தினுள் அகப்பட்டுத் தவிக்கும் மக்களுக்கு இறைவன் இவ்வுலகில் மட்டுமல்ல அவரது சமூகத்தில் எப்போதும் நித்திய ஆறுதல் அருளப்படும் எனும் நம்பிக்கை எமக்கு ஆழமாக வலியுறுத்தப்படுகின்றது.

இன்றைய நாட்களில் எமது தமிழ்ச் சமூகம் பலவித நெருக்குதலுக்குட்பட்டு பாடுகளை அனுபவிக்கின்றது. ஏனைய சமூகத்தவர் அனுபவிக்கும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலை, வடகிழக்குப் பகுதியில் உரிமைகளைக் கேட்டு உபத்திரவங்களை அதிகப்படுத்திக் கொள்ளும் சூழ்நிலை நிலவுகின்றது. பெருமளவில் மக்கள் தமது வீடுவாசல்களை, சொத்துக்களை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். உயிர்கள் அநியாய மரணங்களுக்கு உட்படுத்தப்படுகின்றது. தமிழர் எனும் ஒரே காரணத்திற்காக கைது செய்யப்பட்டு சித்திரவதைப் படுத்தப்படுகின்றனர். வயது வேறுபாடு, ஆண்,பெண் வித்தியாசமின்றி கொடுமைகள் நடைபெறுகின்றன. பலர் இன்று மனமொடிந்து நடைப் பிணங்களாக வாழ்கின்றனர். இம்மக்களை வெறும் ஆறுதல் வார்த்தைகளினால் வழிநடத்த முடியாது. இம்மக்கள் மத்தியில் இறைவனின் சமூகம் கூடவே இருக்கிறது. இறைவன் உங்களை வழி நடத்துவார் என்பது கேலிக்குரியதாகும். ஆனால் உண்மை அதுவேதான் 'எமது கடவுள் துன்பமே வராமல் காக்கின்ற கடவுளல்ல, துன்பத்தினூடாக வழிநடத்தும் கடவுள்' எமது துன்பத்தில் பங்கு கொண்டவராக எம்முடன் கூடவே வாழ்கின்ற கடவுள் என்பதனை யாரும் மறுக்க முடியாது. இறைவனின் பிரசன்னத்தை துன்ப நிகழ்வுகளில் ஒவ்வொருவரின் அனுபவத்தினூடாகவே கண்டு கொள்ளலாம். இடர்பாடுகளின் மத்தியில் 'இறைவா நீ எங்கே' எனும் கேள்வி ஒவ்வொருவர் மனதில் தோன்றினாலும் கூட வாழ்வின் அனுபவங்களை எண்ணிப் பார்க்கும் போது இறைவன் எமது துன்ப துயர வேளைகளில் எம்மைத் தமது கரங்களில் தாங்குபவராக இருக்கிறார் என்பதனை உணர்ந்து கொள்ள முடியும்.

சில வருடங்களுக்கு முன் பஞ்சம், பட்டினி, யுத்தம் எனும் துன்பகரமான சூழ்நிலைக்குள் சிக்கித் தவிக்கும் சோமாலியா நாட்டில், வானத்தில் இயேசுவின் உருவம் தோன்றியதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருந்தது. அந்த நிகழ்ச்சியைப் படம் எடுத்துக்கூட பிரசுரித்திருந்தனர். அங்கு மக்கள் படும் வேதனைகளைப் பொறுக்க மாட்டாமல் இயேசு தம்மை வானத்தில் வெளிப்படுத்தினாரா?..எனும் கேள்வி மக்கள் மனத்தில் எழுந்தது. ஆனால் அவர் வானத்தில் தோன்றும் இறைவனாக மட்டுமல்ல, மக்களின் துன்பத்தில் பங்கெடுப்பவராகவே இருக்கின்றார் என்பதனை மறந்து விடக்கூடாது. அதனாலேயே துன்பங்கள் மத்தியில் வாழும் மக்களுக்குச் செய்யும் சேவையை தனக்கே செய்யப்பட்டதாகச் சொல்கிறார். (மத்தேயு 25 : 34 - 46) எனவே இன்று நாம் அனைவருமே மிகுந்த இடர்பாடுகளின் மத்தியில் வாழ்ந்தாலும், இறை சாட்சியை பற்றிக் கொண்டு வாழ அழைக்கப்படுவதுடன் துன்பம் அனுபவிக்கும் மக்களை இறைவனின் திருப்பெயரால் தட்டியெழுப்பவும், பணி புரியவும் அழைக்கிறோம். துன்புறும் மக்களின் மத்தியில் நாம் செய்யும் சேவையே, மக்களுக்காகப் பாடுபடும் இறைவனையும் அவரது சமூகத்தையும் மக்கள் உணர்ந்து கொள்ள வழி வகுக்கும். எனவே எமக்காக புழுதியில் உழலும் இறைவனை மக்களுக்கு அறிமுகப்படுத்தி, அவரது சமூகத்தினுள் மக்களை வழிநடத்த எம் வாழ்வினை அர்ப்பணிப்போம். இடர்பாடுகளின் மத்தியில் வாழும் மக்களுக்காக இறைவனின் சமூகம் இவ்வுலகில் மட்டுமல்ல - மரணத்தின் பின்பும் என்றும் திறந்திருக்கும்.


# நீ கொடுத்து வைத்தவன்

—மூதூர் ச. அமல்ராஜ்

பாலா
நீ பிறந்த வேளையிலே
பட்டபாடு களைப்பற்றி
பரிதாபப்பட்டதெலாம்
கடந்துபோன
காலங்களில் தான்
ஏனெனில்
நிகழ்கால நிஷ்டூரங்களால்
எம் கண்களுக்குள்
எதிர் காலத்தின்
ஏமாற்றங்கள் நிறைந்துள்ளது.

மார்கழிக் குளிருக்கு
மரி மடியோ
உனக்குத் துணை.
எமக்குச்
சிறு நிழல் தரவும்
பெற்றாரின்
கல்லறை கூட இல்லையே!

வேட்டுச் சத்தத்தையே
தாலாட்டாய்
கேட்கும் எம்
குழந்தைகளை விடவும்
நீ
கொடுத்து வைத்தவன் தான்
ஆடு, மாட்டின்
மணியோசையாவது - உனை
மகிழ்வித்திருக்கும்.



கொடுங்கோலின் - வாளை
வழிதிருப்பி
உனைக் காக்கவோ
வால் நட்சத்திரம்
எமக்குமட்டும்
முன்னோ, பின்னோ
வாலாட்டும்
ஓர் நாய் கூட இல்லையய்யா!

எங்கள்
அனுபவங்களின் கொடுமை
உமது பிறப்பை
எங்களுக்குச் சுகமாக்கிவிட்டது
அதனால்தான் ஆம்
நீ கொடுத்து வைத்தவன்.

# நேர்காணல்

## விழிப்புலனற்றோரின் 'தரிசனம்'

⊙ எஸ். ஏ. இருதயநாதன்

அரச சார்பற்ற சமூகநல அமைப்புக் களின் அறிமுக வரிசையில் இம்முறை விழிப்புலனற்றோருக்கான " தரிசனம் " அமைப்பு இடம்பெறுகின்றது. "வெள்ளைப் பிரம்புகள் தினம்" ஐப்பசி 10ம் திகதி உல கெங்கும் கொண்டாடப்படுகின்றது. விழிப் புலனற்றோரின் உரிமைகளை வெளிப்படுத்த வும் ஒட்டுமொத்த சமுதாயத்தின் பொறுப் புக்களையும் கடமைகளையும் உணரச்செய்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற் படுத்தவும் இத்தினம் சிறப்பிக்கப்படுகின்றது. இலங்கையில் விழிப்புலனற்றோரின் நலன் களைப் பேணும் அரச சார்பற்ற மற்றும் சார்புடைய நிலையங்கள் பல உள்ளன. ஆயினும் தமிழ் பேசுவோருக்கென இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களில் யாழ் விழிப் புலனற்றோர் சங்கம், கைதடி நபீல் பாட சாலை, மட்டக்களப்பு "தரிசனம்" இல்லம் என்பனவே குறிப்பிடத்தக்க பணிகளில் ஈடு பட்டு வருகின்றன.

வெளிநாட்டுப் பணம் இல்லையேல் சமூக நல அமைப்புக்கள் இல்லை எனும் சமகாலச் சூழ்நிலையில் எம்மவர்களால் உருவாக்கப் பட்டு, முற்று முழுதான உள்ளூர் மக்களின் உதவியினாலும் ஆதரவினாலும் இயங்கிக் கொண்டிருக்கும் தரிசனம் இல்லமும் அத னைச் செயற்படச் செய்யும் பொதுச் சபை யும் உண்மையில் பாராட்டுக்குரியன. இதன் தோற்றம், வளர்ச்சி, பணி பற்றிய கருத் தேற்றம் சமுதாயத்தில் அக்கறையுடைய அனைத்துத் தரப்பாருக்கும் உற்சாகத்தையும் ஊக்குவிப்பினையும் அளிக்கவல்லன. அத்து டன் இத்தகைய அமைப்புக்களை இனம் கண்டு பாராட்டுவதும் தட்டிக்கொடுப்பதும் எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இதனடிப்படையில் "தரிசனம்" பற்றிய நேர்காணலைப்பெற நாம் அவ் அமைப்பின் நிரந்தர உறுப்பினரும் முன்னோடிகளில் ஒருவருமான திரு. பத்மநாதன் மகாதேவா அவர்களை வாசகர் வட்டத்தின் உப தலைவர் திரு. சின்னத்தம்பி ரவீந்திரன் என்பவரது துணையுடன் அவரது இல்லத்தில் சந்தித்தோம். இவர் ஓர் இலக்கிய ஆர்வல ரும் சமூக மேம்பாட்டில் அக்கறையுடைய வரும் சிறந்த வாசகருமாவார். 1976 இல் வாசகர் வட்டத்தை ஆரம்பித்தவர்களில் முக்கியமானவர். சிலகாலம் ஆசிரியராகப் பணிபுரிந்த பின் தற்போது புள்ளிவிபரவியல் அதிகாரியாக மட்டக்களப்பு கச்சேரியில் பணி யாற்றிவருகின்றார். படைப்பாற்றல் மிக்க தோர் சமூகத் தொண்டனாகத் திகழும் இவரது நேர்காணலை கீழே தருகின்றோம்.

● வணக்கம் திரு. மகாதேவா அவர்களே! தரிசனத்தின் நீண்டகால உறுப்பினராக வும் முன்னோடிகளில் ஒருவராகவும் திகழும் நீங்கள் அதன் தோற்றம், வரலாறு பற்றிக் கூற முடியுமா?

★ தரிசனத்தின் வரலாற்றைப் பற்றிக் கூறுவதாயின் முதலில் திரு. ந.இதயராஜ னைப் பற்றிக் கூறவேண்டும். இவர் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக்கொண் டவர். தற்போது வெளிவாரிப்படிப்பில்

ஈடுபட்டுள்ளதுடன் தரிசனம் இல்லத்தின் முழுநேரப் பணியாளராக தொழிற்படு பவர். தனது ஏழுவயதில் கண்பார்வையை இழந்தாலும் தந்தையினது முயற்சியினால் யாழ் கைதடி நபீல் நிலையத்தில் பயிற்சிபெற்று சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் க. பொ. த. சாதாரண தரத்தில் சித்தியெய்தியவர். அங்கு அவர் கற்ற காலத்தில் யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவர்.

இவரே 1988இல் மட்டக்களப்புக்குத் திரும்பி இங்குள்ள விழிப்புலனற்றவர்களுக்கு ஆக்கபூர்வமாக எதையாவது செய்யவேண்டுமென்ற ஆர்வத்தில் அப்போது இங்கு இயங்கிய பட்டதாரிகள் ஒன்றியத்தினருடன் தொடர்புகொண்டு ஆரம்பப்பணிகளில் ஈடுபட்டார். அவ்வேளை இவ் ஒன்றியத்தில் திரு. ஜெயக்குமார் (கல்விக் கல்லூரி) திரு. பா. குமரகுருபரன் (சேவைக்கால ஆலோசகர்) திரு. யுவி தங்கராஜா (கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்) திரு. கொ. நிமல்ராஜ் (வீடமைப்பு அதிகார சபை) இப்படி ஏராளமான பட்டதாரிகள் உறுப்பினராக இயங்கினர்.

இவர்களது முயற்சியினால் யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தினைச் சேர்ந்த திரு. செல்லமாணிக்கம் பிரபாகரன் (விழிப்புலன் அற்றும் முதலாவதாக இ. நி. சேவையில் சித்தி அடைந்தவர்) திரு. பத்மசீலன் திருமதி சோதிமலர் பிரபாகரன் ஆகியோர் மட்டக்களப்பிற்கு வருகை தந்து மக்கள் மத்தியில் விழிப்புலனற்றோர் சார்ந்த விழிப்புணர்வூட்டும் பணிகளிலும் பிரச்சார வேலைகளிலும் ஈடுபட்டனர். இவர்களது ஆரம்ப நடவடிக்கைகளுக்கு சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் திரு. செல்வின் அவர்கள் உதவி நல்கினார். பாடசாலைகள் தோறும் சென்று பிரச்சாரங்களில் ஈடுபடுவதிலும் தனிநபர்களிடம் நிதி திரட்டுவதிலும் விழிப்புலனற்றோர் பற்றிய விபரங்களைக் கண்டறிவதிலும்இவர்கள் முழுமூச்சாக ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மறைந்த இலக்கிய விமர்சகரும் எழுத்தாளருமான திரு. வீ. ஆனந்தன் அவர்கள் பாரிய பணியினை மேற்கொண்டார். இவர்களுடன் வாசகர் வட்ட உறுப்பினர்கள் சிலரும் பணிபுரிந்தனர்.

● ஆரம்ப நடவடிக்கைகள் என்று குறிப்பிட்டீர்கள் அதைச் சற்று விளக்கமாகக் கூறலாமா?

★ அதாவது 1989 காலப்பகுதியில் திரு. யுவி தங்கராஜா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் திருவாளர்கள் பிரபாகரன், சிவசுப்பிரமணியம், செல்வின், எருவில் மூர்த்தி, திருமதி சோதிமலர் போன்றோர் இடம்பெற்றிருந்தனர். இவர்களுடன் நானும் இன்னும் பலரும் உறுப்பினர்களாக இருந்தோம். இக்குழுவில் தலைமையிலேயே அனைத்து வேலைத் திட்டங்களும் இடம்பெற்றன. அத்துடன் 'தரிசனம்' என்ற பெயர் தெரிவு செய்யப்பட்டதும் யாப்பு வரையப்பட்டதும் இக் குழுவின் காலப்பகுதியிலாகும். ஆரம்ப கால நிதி சேகரிப்பில் உதவியவர்களில் திரு. ருத்திரா அவர்கள் முக்கியமானவர். மத்திய கிழக்கில் இருந்த தனது சக நண்பர்களிடமிருந்து நிதி திரட்டி எமக்கு அனுப்பி வைத்தவர். அது தவிர இங்கிலாந்தில் இயங்கும் மட்டக்களப்பு பல்கலைக்கழக அபிவிருத்திக் கழகம் (BUDS) கூட பெருமளவு பண உதவி நல்கியது.

ஆரம்ப நடவடிக்கைளில் அடுத்ததாக விழிப் புலனற்றோரைப் பராமரிப்பதற்கும் கல்வி ஊட்டுவதற்குமான இரு ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு கைதடி நபீல் பயிற்சி நிலையத்துக்கு ஆறு மாத பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். அதேவேளை "தரிசனம்" இல்லத்தை அமைப்பதற்கு ஒரு இடத்தினை கண்டு பிடிக்கும் வேலை முடுக்கி விடப்பட்டு 1990 இன் ஆரம்ப காலத்தில் ஒரு அமைப்புக்குச் சொந்தமெனக் கருதப்பட்ட இல்லம்

ஏரிக்கரை வீதியில் பெறப்பட்டது. ஆயர் அவர்களின் பண உதவியுடனும் திரு. ராஜன் நடராஜா என்பவரது சரீர உதவியுடனும் இவ் இல்லம் புதுப்பிக்கப்பட்டது. அத்துடன் பாடசாலை மாணவர்கள், சாரணர்கள் என்போரது உதவியும் பெறப்பட்டது. எமது நிதியும் இவ் இல்லத்தின் புனருத்தாரணப் பணிகளுக்கு இறுதியில் பயன்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்ட வேளை மட்டக்களப் பின் அரசியல் சமூகச் சூழ்நிலை மாற்ற மடைந்தது. இதனால் மீண்டும் 1990 இன் இறுதிப் பகுதியில் அவ் இல்லம் குறிக்கப் பட்ட அமைப்பினால் எடுத்துக் கொள்ளப் பட்டது. இதனால் திரும்பவும் இடம் தேடும் படலம் ஆரம்பமானது.

அதேவேளை இக்காலப் பகுதியில் வெளி நாட்டில் வாழும் எமது பிரதேசத்தவர்கள் நிதிஉதவி நல்கினர். இந்நிதி அரசடி மக்கள் வங்கியில் இருப்பிலிடப்பட்டு கையாளப்பட் டது. இக்கணக்கு இன்றும் அவ்வங்கியில் நடைமுறையில் உள்ளது. அத்துடன் எமது உறுப்பினர்கள் இல்லத்தில் சேர்ப்பதற்காக விழிப்புலனற்ற, படிக்கக்கூடிய பிள்ளைகளை திரட்டும் பணிக்கு கிராமம் கிராமமாகச் சென்றனர். பெற்றோர்கள் அரசியல் சூழ் நிலை காரணமாக சிறிது தயக்கம் காட்டினர். 1991 காலப்பகுதியில் கல்லடி உப்போடையில் அமைந்துள்ள தற்போதைய தரிசனம் இல்லம் எமக்குக் கிடைத்தது. முன்னைநாள் பிரதி அரச அதிபர் திரு. சங்காரவேல் அவர்களுக்கு சொந்தமான இவ் இல்லம் திரு. பிரசாத் (மகாஜனக் கல்லூரி அதிபர்) அவர்களின் பராமரிப்பில் இருந்தது. நாம் அவரை அணு கிக் கேட்டவேளை 300/- மாத வாடகைக்குத் தர சம்மதித்தார். ஆயினும் இன்று வரை அவரோ அல்லது இங்கிலாந்தில் வசிக்கும் திரு. சங்காரவேல் அவர்களின் குடும்பமோ எம்மிடமிருந்து ஒரு சதப் பணத்தினையும் அறவிடவில்லை. மாறாக நிதி உதவி செய்த துடன் தமது இரண்டாவது இல்லத்தையும் எம் பாவனைக்குத் தந்துதவி உள்ளனர்.

● தற்போது தரிசனத்துக்கென்று ஏதாவது சொந்த நிலம் உள்ளதா?

★ ஆம் தற்போது பெறப்பட்டுள்ளது. அன்று பிரதி அரச அதிபராக இருந்த தற்போதைய அரச அதிபர் திரு. ஏ. கே. பத்மநாதன் அவர்களினால் வழங்கப் பட்ட நிலம் கல்லடி விபுலாநந்த இசை நடனக் கல்லூரிக்குப் பின்னாக உள் ளது. வேலி போடப்பட்டுள்ள இக்காணி யில் சகல வசதிகளும் கொண்ட நாலு மில்லியன் பெறுமதி உள்ள ஒரு மாடிக் கட்டடம் அமைக்கப்பட உள்ளது. இதற் கான வரைபடத்தை திரு. மார்சலீனோ அவர்கள் வரைந்துள்ளார்.

● நீண்டகால உறுப்பினர் என்ற வகையில் தங்கள் அமைப்பில் உள்ள அங்கத்துவ நடைமுறை என்ன?

★ ஆயுட்கால உறுப்பினர்களாக இருப்பவர் கள் மொத்தமாக ஆயிரம் ரூபாவையும் சாதாரண உறுப்பினர்களாக இருப்போர் மாதமொன்றுக்கு பத்து ரூபாவையோ அல்லது வருடமொன்றுக்கு நூறு ரூபா வையோ செலுத்துவதன் மூலம் எமது தரிசனத்தின் அங்கத்தவர்களாக உள்ள னர். இவர்களது உறுப்புரிமை பொதுச் சபையில் இருக்கும்.

● தரிசனம் அமைப்புக்குப் புறம்பே விழிப் புலனற்றோருக்குதவும் வேறு நடவடிக் கைகள் உள்ளனவா?

★ தற்போது ஒரு புதிய முன்னெடுப்பு இடம் பெற்றுள்ளது. க. பொ. த. சாதாரண தரம் வரை கற்ற விழிப்புலனற்ற திரு. செல்வநாதன் என்பவர் கிழக் கிலங்கை விழிப்புலனற்றோர் சங்கம் ஒன்றினை நிறுவுவதற்கென முன்னோடி யாக ஒரு செயற்குழுவினை உருவாக்கி உள்ளார். இக்குழுவில் 18 பேர் அங்கம் வகிக்கின்றோம். என்னுடன் வாசகர் வட்டத்தைச் சேர்ந்த திரு. கமலதாஸ் தேவகாந்தன் போன்றோர் உள்ளனர். எமது பணி யாப்பு ஒன்றினையும் ஒழுங்கு விதிகளையும் வரைவதாக இருந்தது. கடந்த ஐப்பசி 27 இல் நடந்த கூட்டத் தில் யாப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மார்கழி 1ம் திகதி அடுத்த கூட்டம் கூட்டப்படவுள்ளது. கிழக் கிலங்கை விழிப்புலனற்றோர் சங்கம் கல்வி கற்காத விழிப்புலனற்றோருக்கும் உதவும் வகையில் செயல்பட உள்ளது. அத்துடன் தரிசனத்துக்குப் பக்கபலமாகத் திகழும் என்றும் எதிர்பார்க்கப்படு கின்றது.

(தொடரும்)




ந.பார்த்திபன்

—18—

"என்ன வின்சன் ஒன்றுமே பேசமாட்டீங்களா?''

''ஏன் நான் தான் பேச வேண்டுமா? நீங்க ..''

''சரி,எப்படியிருக்கிறீங்க... இப்ப உங்களுக்கு லீவு தானே என்ன செய்யிறீங்க... அம்மா அப்பா எல்லாம் சுகமாக இருக்கிறாங்களா...? பேசியது போதுமா? இனி நீங்க பேசுறீங்களா?''

இருவரும் சிரிக்கின்றனர். ''போதும் பேசுறதென்றால் நிறைய கேள்வி கேட்பது தானா? ரீச்சர்ஸ் தானே, கேள்விகள் தான் கேப்பாங்க. அவங்களுக்கு கேள்வி மட்டுந்தானே தெரியும்''

''திருவிளையாடல் தருமி மாதிரி''என ரலீனா சொல்ல ''இப்ப கண்ணன் நின்றால் என்ன! கேள்வி கேட்பது 'ஈஸியா'? அந்த 'சப்ஜெக்ற்' பற்றிய அறிவிருந்தாத்தானே கேள்வி கேட்க முடியும்'' என்று பதில் கூறியிருப்பான் என வின்சன் கூறுகிறான்.

இந்தத் தங்களை மறந்த பேச்சும்-சிரிப்புமே தங்களைப் பிரித்த கொடிய வியாதி என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள்.

''வின்சன் இந்தப் பாதையில மற்றும் நாட்களில் நடக்கிறதென்றா எவ்வளவு வேதனையாயிருக்கும் தெரியுமா? ஒரு வாகனம் வந்தா நின்றிட வேண்டும். கரையோரம் ஒதுங்கி நிற்க முடியாது. அட்டை அவ்வளவு. மேலே ஏறும் போது களைப்பும்-தனிமையும்.. இந்த நடையை நினைச்சா கடைசிப் பாட நேரங்களில நின்று படிப்பிக்கவே முடியாது போலிருக்கும்.''

''இருந்து படிப்பிச்சுப் பழகுங்கோ. அதுக்கெல்லாம் உங்களுக்கு'ரெயினிங்',தரல்ல என்ன? அது நீங்களாகவே சில 'சீனிய ரீச்சர்ஸை'ப் பார்த்து தெரிஞ்சிக்கணும் அதெல்லாம் 'ன்ரேணல்' றெயினிங்' ரலீனா'''

மௌனம் தொடர்கிறது. தான் எங்கேயோ பேச்சை இழுத்துச் சென்று விட்டேனே என அந்த மௌன வேளையில் உணர்ந்த வின்சன், இனி எப்போ இவளைச் சந்திப்பது ? வழமையாகச் சந்திப்பது போல ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறேனே என நினைத்தவனாய் ''ரலீனா'' என அழைக்கிறான்.

அவன் குரலில் ஏற்பட்ட மாற்றத்தை அவதானித்த ரலீனா, தன்னை அழைத்த அவன் முகத்தைப் பார்க்கிறாள்.

''ரலீனா, நான் வந்து சந்திப்பதால்... உங்களுக்கேதாவது பிரச்சினைகள் வருமா?''

அந்தக் கேள்வியில் இன்று மட்டுமல்ல, இனியும்... என்ற அவன் நினைப்பு அவளுக்குப் புரிய, ''இல்லை. அப்படி என்னதான் இன்னும் வரப்போறது''? என்று சொல்லியபடி அவனை ஆதரவோடு பார்க்கிறாள்.

இன்னும் என்ற அந்தச் சொல்லில் அவள் கொடுத்த தாக்கத்தை உணர்ந்த வின்சனுக்கு ஒரு கணம் வேதனையாய்த்தான் இருந்தது. எல்லாமே வந்து விட்டதே...... கெட்ட பெயர், அலைச்சல், நட்பிழப்பு ..

# தொடர்கதை

''ரலீனா நா உங்களோடு நிறையப் பேசணும். முக்கியமான ஒரு விசயம் பேசணும். எப்ப எங்கே என்று நீங்க தா சொல்லணும்''

வின்சனின் முகத்தில் ஏற்பட்ட இறுக்கம், குரலின் தளர்வு வார்த்தைகள் தடைப்பட்டு வந்த விதம் எல்லாம் ரலீனாவுக்குப் புரிகிறது.

அவனைப் பார்த்த போது அவனின், தன் கண்களையே உற்று நோக்கும் பார்வையைத் தாங்காது தலையைக் குனிந்து கொள்கிறாள்.

கால்கள், ''பழக்கப்பட்ட பாதையில் வண்டியோட்டி தூங்கினாலும் வீட்டுக்குப் போய்ச் சேரும் மாடுகளாக'' பஸ் நிலையம் நோக்கி நடக்கின்றன. மீண்டும் மௌனம் சுவராய் எழுந்து கொண்டது. திரையாய் விழுந்து கொண்டது. உடைப்பதும்-கிழிப்பதும் ரலீனாவின் பொறுப்பாய்...

இவ்வளவு நேரமும் வழமை போல் பேசிவந்த வின்சன், முக்கியமான விடயம் ஒன்று என்றதும், தன்னைச் சந்திக்கத் தனியே வந்ததும் அவளுக்கு நன்கு புரிகிறது. எங்கே சந்திப்பதாயினும் தன்னை அது பாதிக்கும், தன் தொழிலுக்குத் தடையாகி விடும், தன் உயர்படிப்பு எண்ணம் என்பன குலைந்திடும்... என்ன செய்வது என்ற யோசனையில் அவள். அந்த மௌனச் சுவர் வளர்ந்து கொள்கிறது.

இங்கே, இப்பவே சொல்லவா? எதுவாயினும் யோசித்துச் சொல்லுங்கோ எனச் சொல்லி விட்டுப் போகவா? எப்படிச் செய்யலாம்? என சிந்தித்தவாறு வின்சன் எதற்கும் ரலீனா சந்திக்கும் இடத்தைச் சொல்லி விட்டால் அதன் பிறகே சொல்வது நல்லதென நினைக்கிறான். விடையில்லாத வினாக்களை அடுக்குவதில் பயனென்ன?

''ரலீனா, நா 'லெற்றர்' போட்டிருப்பேன். ஆனா உங்க ஸ்கூலில் எவ்வளவு நாகரீகமாக நடப்பாங்களென்று சொல்ல முடியாது. நீங்க இடமாறிய விசயம் தெரிஞ்சதால 'பேசனலா' வாற கடிதங்களை உடைச்சுப் படிச்சிடுவாங்க......... நாங்க ரீச்சர்ஸ். அப்படி மற்ற ரீச்சர்ஸ் நினைக்கக் கூடாது என்று சொல்றதெல்லாம் எனக்கு நம்பிக்கையில்ல ... அதான் நா கடிதம் போடல்ல'

வின்சன் சொன்னதைக் கேட்டபடி தன் பாடசாலையை, தான் போனதன் பின் நடந்த சில சம்பவங்கள் சம்பாசனைகள் என்பவற்றை நினைத்துப் பார்க்கிறாள். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தூங்கிக்கிட்டு ஒரு மிருகம் இருக்கிறது. என்பது எவ்வளவு உண்மை. சிலரிடத்தில் அந்த மிருகம் முழிச்சிக்கிட்டிருக்கு. அன்று அதிபர் 'நாங்க உங்களை விடமாட்டம். நீங்க மற்றப்பக்கம் போகப் பாக்கிறீங்க என மார்பில் சிலுவைக் குறியிட்டுக் காட்டி, ஏன் எங்கட பொடியங்களுக்கு என்ன குறைச்சல்? ' என்று கேட்டு நையாண்டியாகச் சிரித்தார்.

அதற்கு இன்னொரு ஆசிரியர் 'செயற்கையான குறைச்சலொன்று இருக்கிதுதான். ஆனா, அது எவ்வளவு பிரயோசனமென்பது இவங்களுக்கு இப்ப புரியாது' எனச் சொல்லிச் சிரித்தார். தொந்தி குலுங்கி அசிங்கமாக இருந்தது.


'ரலீனா என் ஒன்றும் பேசுறீங்க இல்லே' வின்சனின் வினாவுக்கு தலை நிமிர்ந்து பார்த்தவளின் கண்களில் அந்தக் கசப்பான நினைவுகள் கலங்கலை ஏற்படுத்த, சிவந்து கசிந்த கண்களைத் துடைத்தபடி 'நான் போகும் பஸ்ஸில் வாங்கோ' வின்சன் எனக் கூறுகிறாள்.

இருவரும் பஸ் நிலையத்தில் நின்ற அவளது வீட்டருகே செல்லுகின்ற பஸ்ஸில் ஏறி அமர்கின்றனர்.

'ரலீனா நா இடையில் இறங்கிக் கொள்கிறேன்' சரியெனத் தலையை ஆட்டியபடி அவனைப் பார்க்கிறாள். அவனையறியாது கண்கள் பஸ் நிலையத்தை மேய்கின்றன. தெரிந்தவர்கள் யாராவது நிற்கிறார்களா? அவர்கள் தன்னைத் தாக்காது ரலீனாவுக்கு புதுத் தலையிடி கொடுத்திடுவார்களே என்ற கவலை ,அவனுக்கு.

பஸ் புறப்பட்டு சிறிது தூரம் சென்று நகரின் எல்லையைத் தாண்டியதும் 'ரலீனா' என்றபடி அவள் 'கான்பாக்கின்' மேலிருந்த அவளது கை விரல்களைப் பிடிக்கிறான் வின்சன். அவன் முகத்தைப் பார்த்தபடி தன் கையைத் திருப்பி அவன் கைவிரல்களோடு கோர்த்து இறுக்கமாகப் பற்றிக் கொண்டான். இனி இந்தக் கைகள் எப்போதும் பிரியக் கூடாது என இருவரும் இறுக்கமாக்கிக் கொண்டனர்.

(தொடரும்)



# திருச்சபைச் செய்திகள்

### வைர விழா

திருக்கோணமலை, புனித மரியாள் பேராலய பங்குத்தந்தை, அருட். திரு. தியோப்ளஸ் றாகல் தனது 60 வயதினை 11 - 11 - 1996 அன்று பூர்த்தி செய்தார்.

பங்குத் தந்தையின் பிறந்தநாளை முன்னிட்டு பேராலய மேய்ப்புப் பணிச் சபையால் அன்றைய திருப்பலி சிறப்பிக்கப்பட்டது. அருட். திரு. சொய்சா, அருட். திரு. ஆஞ்சலோ பொன்னையா ஆகியோருடன், பிறந்தநாள் காணும் பங்குத் தந்தையும் இணைந்து கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றினர். இளையோர் முதல் முதியோர் வரை திருப்பலியில் பங்கேற்று, திருப்பலி ஈற்றில், எம்மை இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வழி நடத்தும் எம் அன்புப் பங்குத் தந்தைக்கு தம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

### புனித ஸ்ரனிஸ்லாஸ் கொஸ்தாவின் பெரு விழா

திருக்கோணமலை, புனித மரியாள் பேராலய பீடப் பரிசாரகர்கள் தங்கள் பாதுகாவலரான, புனித ஸ்ரனிஸ்லாஸ் கொஸ்தாவின் பெரு விழாவை 27-10-96 அன்று பக்திச் சிறப்புடன் கொண்டாடினர்.

தம் பாதுகாவலரின் பெருவிழாவை சிறப்பிக்குமுகமாக அன்று மாலை அருட். திரு. தியோப்ளஸ் றாகல், அருட். திரு. சாந்தன் இம்மானுவேல், போசகர் திரு. அன்டன் ஆகியோருடன் பீடப் பரிசாரகர்கள் இரா விருந்துண்டு மகிழ்ந்தனர்.

### விருது பெற்ற அதிபர்கள் திருகோணமலை, புனித மரியாள் பேராலயத்தில்

மாண்புமிகு ஜனாதிபதியிடமிருந்து 'சிறந்த அதிபர்கள்' என்ற உயரிய விருதைப் பெற்ற திருமலை, புனித மரியாள் தேசிய கல்லூரியின் அதிபர், அருட் சகோதரி தெரேஸ்ராணி (A. C), திருமலை, இ. கி. ச. கோணேஸ்வரா தேசிய இந்துக்கல்லூரியின் அதிபர், திரு. சி. தண்டாயுதபாணி, மட்டுநகர் புனித சிசிலியா தேசிய கல்லூரியின் முன்னாள் அதிபர், அருட். சகோதரி. டிலக்ரா (A.C) கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய கல்லூரியின் அதிபர், அருட். சகோதரர். மத்தியு (S.S.J.) ஆகியோரைக் கௌரவித்து, திருமலை புனித மரியாள் பேராலயத்தில் விசேட நன்றித் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

வரவேற்புரை நிகழ்த்திய திருமதி. A. F. சுப்பிரமணியம், "இவர்கள் பெற்ற இவ்விருது நம்மையெல்லாம் கௌரவிக்கின்றது. ஏனெனில் இவர்கள் நம்மவர்கள், துறவறம் பூண்ட சகோதரர்கள். இறைவனுக்கென தம்மை அர்ப்பணித்து இறைபணியுடன் கல்விப்பணியையும், இணைத்து ஆற்றிய தன்னலமற்ற சேவையினால் அவர்களுக்குக் கிடைத்த விருதாகும். என வலியுறுத்தினார். அவரது உரையின் பின் விசேட கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

திருப்பலி நிறைவில் உரையாற்றிய அருட் சகோதரி. தெரேஸ்ராணி (A.C) "இவ்விருது தமக்குரிய விருதல்ல என்றும், தன்னுடன் சகல விதத்திலும் ஒத்துழைத்த ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை ஆகிய ஒவ்வொருவரினதும் கூட்டு முயற்சியினால் தமது பாடசாலைக்கு கிடைத்த விருது" என்று குறிப்பிட்டார்.

அவரைத் தொடர்ந்து திரு. சி. தண்டாயுதபாணி, "தான் ஓர் இந்து மதத்தைச் சார்ந்தவராக இருந்தும், புனித மரியாள் மேய்ப்புப்பணிச்சபை, இப்பாராட்டு விழாவில் தன்னையும் அழைத்து கௌரவித்தமை அவர்களின் பரந்துபட்ட மனப்பான்மையும், மத பேதமற்ற தன்மையையும் காட்டுகிறது. பங்குத் தந்தைக்கும், மேய்ப்புப்பணிச் சபை அங்கத்தினருக்கும் பங்கு மக்களுக்கும் தம் உளங்கனிந்த நன்றியை தெரிவிக்கின்றேன்" என்று கூறினார்.

ஈற்றிலே, மேய்ப்புப்பணிச்சபைச் செயலாளர், திரு. கிளமண்ட் இம்மானுவேலும், உதவிச் செயலாளர் திரு. ஜேசுதாசனும் பங்குத் தந்தையால் ஆசீர்வதிக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை வழங்கி கௌரவித்தனர்.

தகவல்: திருமலையூர் ஏட்றியன் பல்தசார்

# இன்னும் —— பிறக்க —— வேண்டும்

● ஆழியோன்

இனிமையான காலைநேரம் காலை எட்டுமணி மெல்லிய குளிர்காற்று வீசிக்கொண்டிருக்கிறது. இரவு முழுவதும் பெய்த மழை, புதிய நேர மாற்றம் என்பன இன்னும் சூரியனை வெளிக்கொணரவில்லை; அவனை மேகங்கள் திரையிட்டுக் கொண்டிருந்தன. என்றாலும் மெல்லிய வெளிச்சம் பாரெங்கும் பரவிக் கிடந்தது..ஆர்தர்சி கிளார்க்' எழுதியதுபோல் மட்டக்களப் பின் சுவாத்தியம் மெல்ல, மெல்ல மாறிக்கொண்டு வருகின்றது போலும். இவ்வாண்டின் பெரும்பாலான மாதங்களில் மும்மாரியல்ல நான்கு அல்லது ஐந்து மாரிகள் பொழிந்து தள்ளுகின்றன. மட்டக்களப்பு வாவிப்பெண்ணுக்கு ஆண்டு முழுவதும் நிறைமாதம்.

அந்த மகா வித்தியாலயத்தின் மணி ஒலித்து ஒய்ந்தது. மாணவர்கள் வரிசை, வரிசையாக காலைப்பிரார்த்தனைக்காக சென்று கொண்டிருந்தனர். மைதானத்தின் ஒருபுறம் இந்து மாணவர்களும், இன்னொரு புறம் கிறிஸ்தவ மாணவர்களும் இறைவழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருக்க வேறொரு இடத்தில் கத்தோலிக்க மாணவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். நானும் அவர்களுடன் வழிபாட்டில் கலந்துகொண்டிருந்தேன்.

காலை வழிபாடு முடிவடைந்ததும் மாணவர்கள் மைதானத்தில் உடற்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இங்கு மதவேறுபாடு இல்லாமல் எல்லோரும் கூடியிருந்தனர். ஆசிரியர்கள் அனைவரும் அவர்களை மேற்பார்வை செய்துகொண்டிருந்தனர். அப்போது சிவநாதன் ஆசிரியர் என்னை நோக்கி வந்தார்.

''வணக்கம் சேர்'' என்று கூறினேன். நெற்றி நிறைய விபூதி, கூர்மையான கண்கள் என்பன அவருடைய விசேட அடையாளங்கள்; ஐம்பது வயதைத்தாண்டி விட்டார். வார்த்தைகளை அளந்துதான் பேசுவார். எதிலும் நிதானம், மென்மை.


அவர் என்னைப் பார்த்து ''வணக்கம் சேர்'' என்று கூறினார். நான் அவரிலும் எவ்வளவோ வயதில் குறைந்தவன்; என்றாலும் 'சேர்' போட்டுத்தான் கூப்பிடுவார்.

''சேர், நான் சின்னசந்தேகம் ஒன்று கேப்பன் கோவிப்பீங்களா?'' என்று கேட்டார்.

''இதென்ன கேள்வி ..... கேளுங்க சேர்''

''நீங்க என்ன சமயம் ..?''

நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். விடை அவருக்கு நன்கு தெரியும் தானே. என்றலும் ''கத்தோலிக்கம்'' என்றேன்.



''யாரை வணங்குறீங்க.?''

''இயேசுவை...''

''நல்லது. அந்த மாஸ்டர் யாரை வணங்கிறவர்?'' சற்று தள்ளி நின்ற வேறொரு திருச்சபையை சேர்ந்த கிறிஸ்தவ ஆசிரியர் ஒருவரைச் சுட்டிக் காட்டிக்கேட்டார்?

''அவரும் யேசுநாதரத்தான்...''

''அப்படியெண்டா ஏன் ஒரே யேசுவை, பள்ளியில இரண்டாப்பிரிச்சு கும்புடு நீங்க ஏன் அப்பிடி? பாவிங்க அவர சிலுவையில அறைஞ்சு கொண்டாங்க... ஆனா நீங்க எல்லாம் அந்தாள துண்டு துண்டாப்பிய்க்கிறீங்க...''

ஏன்...?''

நான் மெதுவாக தலையைக் குனிந்து கொண்டேன். அப்போது வானத்தில் மின்னலொன்று மரவேர்க்கோலம் போன்று வெள்ளிக்கோடுகளாய் வெளிச்சமிட்டது. என் தலைக்குள்ளும் வெளிச்சக் கீற்றுகள். இந்த மனிதர் என்னமாய்க் கேட்டுவிட்டார். இவ்வளவு காலமாய் எனக்குள் இவ்வாறான எண்ணம் ஏற்படவில்லையே நான் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனேன்.

''என்ன சேர் கோவிச்சிட்டீங்களா...?''-சிவநாதன்

''இல்ல சேர்... யோசிக்க வைச்சிட்டீங்க...''

''இதயும் யோசிக்க...இந்த வருசமும் தனித்தனிய செய்யாம இரண்டு பகுதியாரும் ஒருமிக்கச்சேந்து ஒளிவிழாவக் கொண்டாடினா என்ன...?'' என்று என்னை ஊடுருவிப் பார்த்துக்கொண்டே சிவநாதன் சேர் கேட்டார். மீண்டும் மழை ஆரம்பிக்கத்தொடங்கியது. மாணவர்கள் வகுப்புகட்கு விரையத் தொடங்கினர். என் மனதிலும் சிந்தனை மழை.

பல வாரங்கள் ஓடி விட்டன. இன்று பாடசாலையில் ஒளிவிழா. பாடசாலை மண்டபம் அலங்கரிக்கப்பட்டு ஒளிமயமாகக்காணப் பட்டது. மாணவர்கள் கலகலப்பாகவும், சந்தோசமாகவும் காணப்பட்டனர். விழாவிற்காக விருந்தினர்கள், பங்குத் தந்தையர்கள், மற்றைய திருச்சபைகளின்|போதகர்கள் எல்லோரும் வந்து விட்டனர். ஆனால் என் மனம்தான் சற்றுக்கலவரம் அடைந்திருந்தது. காரணம் இன்று என் கையில்கிடைத்த மொட்டைக்கடிதம்.

'அடேய் கோடாரிக்காம்பு வாத்தியே! மாதாவ திட்டிறவனுகளோட சேர்ந்து விழா கொண்டாடப் போறியா, நன்றிகெட்டவனே, உன்னைக் கவனிக்கிற விதத்துல கவனிப்பம்.

-சுத்தக் கத்தோலிக்கன்-

கடித விடயம் சிவநாதன் சேருக்கும் தெரியும். கையில் 'ரெஸ்டர்' வைத்திருந்த சிவநாதன் ஆசிரியர் என்னைக் கண்டதும்''சேர், ஹோலுக்க ஒருசெக்ஷன் பியூஸ்போயிற்று இப்ப அதச் சரிப்பண்ணிப் போட்டன்... அது சரி என்ன ஒருமாதிரி இருக்கிங்க... கடிதம் பற்றி யோசிக்காதீங்க சில ஆக்களுக்கும் இப்புடி அடிக்கடி பியூஸ் போற .. உண்மையில சேர் இன்னும் பலபேர்ர இதயத்தில ஒளி இல்ல. அவங்கட மனசுல இயேசு பிறக்கல்ல... அவர் இன்னும் இன்னும் பிறக்க வேண்டியிருக்கு... நம்மட ரீச்சர்மாரே இன்றைக்கு 'சிக்' போட்டிருக்காங்க, என்ன செய்யிற... வாங்க நிகழ்ச்சிய தொடங்குவம்.'' என்றவாறு என்கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு பின் கதவு வழியாக மேடைக்கு கூட்டிச் சென்றார்.

வெளியில் மட்டக்களப்பு வாவியின் நீர் மட்டம் சற்றுக் குறைந்திருந்தது. முகத்துவாரம் வெட்டப்பட்டதால் நீர் விரைவாக ஓடி வடிந்து கொண்டிருந்தது. என் மனக் கலவரமும் சற்று வடியத் தொடங்கியது. கையில் ஒலிவாங்கியை பிடித்தபடி ''அனைவருக்கும் நத்தார் சோபனங்கள் '' என்றவாறு நிகழ்ச்சிகட்கான அறிவித்தலை ஆரம்பித்தேன்.

(யாவும் கற்பனையே)

## இயேசு பிறப்பின் 2000 ஆம் ஆண்டை முன்னிட்ட ஆயத்த நிகழ்வு

இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பின் 2000ஆம் ஆண்டு ஜுபிலி விழாவை முன்னிட்டு ஆயத்த நிகழ்வினை கல்முனை மறைக்கோட்ட மேய்ப்புப் பணிச்சபை நடாத்தியது.

கடந்த 7ம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக திருமலை-மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு J.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் கலந்துகொண்டார். சிறப்பு அதிதிகளாக அருட் பணியாளர் J. டிக்கோணிங், T. பயஸ் பத்மராஜா உயர்திரு அன்ரன் பாலசிங்கம் (மாவட்ட நீதிபதி கல்முனை ) ஆ. சகோ. S. A. I. மத்தியு ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலை 8-45 மணிக்கு கல்முனை திரு. இருதயநாதர் ஆலயத்தில் கூட்டுத் திருப்பலி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மு. ப. 10-30மணிக்கு கார்மேல் பாத்திமாக் கல்லூரி மண்டபத்தில் கலாசார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஜுபிலி ஆண்டுக்கு ஆயத்தமாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற பேச்சு, கவிதை, நாடகம் போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றதோடு வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. விழாவை நினைவு கூரும் விதத்தில் மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப் பட்டது.

திரு/மட் மறை மாவட்டத்தில் இயேசு பிறப்பின் 2000 ஆம் ஆண்டின் ஆயத்த நிகழ்வுகளை முன்னோடிகளாக நடத்திச் செல்லும் கல்முனை மறைக்கோட்ட மேய்ப்புப்பணிச் சபையினர் பாராட்டுக்குரியவர்கள்.

# கிளரீசிய

# வேத போதக சபை

"அமல மரியின் போதக மக்கள்" (The Sons of the Immaculate heart of the Blessed Virgin Mary) என்ற வேத போதக சபையை அருட் தந்தை அந்தோனி மரிய கிளாரட் 1849ம் ஆண்டு ஆடித் திங்கள் 16ம் நாள் நிறுவினார். இவ் வேத போதக சபை நிறுவப் பட்டபோது அருட் தந்தையுடன் இன்னும் ஐந்து குருக்கள் முழுமையான பணிக்காகத் தம்மை அர்ப்பணித்திருந்தனர்.

இம் மாபெரும் நற்செய்திப் பணியை தூய ஆவியின் வழிக்காட்டுதலில் தொடங்கிய புனித அந்தோனி மரியகிளாரட் ஸ்பெயின் நாட்டிலே பிறந்தார். இவருடைய பெற்றோர் ஒரு நெசவாலையை நடாத்தி வந்தார்கள். எனவே சிறுவன் அந்தோனியும் நெசவு வேலையில் சிறப்புடன் தேர்ச்சி பெற்றிருந்தான். எனினும் இறைவனின் குரலை இனிதே தன் இதயத்தில் பதித்து அனைத்தையும் துறந்து 1835ம் ஆண்டில் இயேசுவின் இனிய குருவாக திருநிலைப்படுத்தப் பெற்றார். அன்று முதல் நற்செய்தியை அறிவிப்பதிலேயே தன்னை முழுமையாக ஈடுப்படுத்தினார். ஸ்பெயினிலும், கனேறியத் தீவுகளிலும் இவர் பணி பரந்து சென்றது.

நற்செய்திப் பணியின் இனிமையையும் அதன் பெரும் சுமையையும் உணர்ந்த, கிளாரட் தெளிந்த சிந்தனையுடனும் தீவிர நோக்குடனும் தமது நற்கருணைப்பக்திக்கும், மரியாளின் அன்புக்கும் உவகையாக "அமல மரியின் போதக மக்கள்" என்னும் சபையை நிறுவி மரியாளின் மாசற்ற இதயத்திற்கு இப்புதிய சபையை அர்ப்பணித்தார்.

ஓர் அமலரியின் மகன் யார் என்று புனிதர் கூறுகையில்: "அவன் அன்புத் தீயால் பற்றி எரிபவன், தான் செல்லும் இடமெல்லம் அவ்வன்புத் தீயைப் பரப்புவன். அவ் இறை அன்புத் தீயில் ஒவ்வொரு மனிதனும் பற்றி எரிந்து சுடர்விட தன்னையே தருபவன். அவனை எதுவும் தடுப்பதில்லை. வெறுக்கப் படினும் இன்புறுவான். பணிகளை அவன் வரவேற்பான். தியாகச் செயலை அவன் அரவணைப்பான். துன்பத்திலும் வேதனையிலும் அவன் மகிழ்ச்சி அடைவான். இயேசுவின் சிலுவையிலும் அவன் மகிமையடைவான். அவனின் முழுக் குறிக்கோளுமே கிறீஸ்துவை எப்படித் தன் வாழ்வில், செபத்தில், பணியில் தன் வாழ்நாள் முழுவதுமே பிரதிபலித்து இறைவனின் மகிமைக்காக, மனிதனின் மீட்பிற்காகத் தன்னையே அர்ச்சனையாக்குவது என்பதாகும்" என்றார் தந்தை கிளாரட்.

தந்தை கிளாரட்டினால் தொடங்கப்பட்ட இச்சபை இன்று பல்வேறு நாடுகளில் வேரூன்றி 3000க்கு மேற்பட்ட அங்கத்தினருடன் நற்செய்திக்கு சாட்சியம் பகர்கின்றது.

**இச்சபை புரிகின்ற பணிகளாவன:**

1) புதிய பணித் தளங்களை அமைத்தல்
2) சிறுவர்கள், இளைஞர்களைப் பயிற்றுவித்தல்
3) தொலைத் தொடர்பு சாதனங்கள் ஊடாக நற்செய்தியை பரப்புதல்
4) தியானங்கள் நடத்துதல்

(29ம் பக்கம் பார்க்க)

# விவிலியப் - பொது அறிவுப் போட்டி - 17

1. உலகம் புத்துயிர் பெறும் நாளில் பன்னிரண்டு சீடர்களுக்கும் என்ன நடக்கு மென்று இயேசு கூறினார்?

....................................................................................................

2. ''அவர் பாவம் எதுவும் செய்ததில்லை. அவரது வாயினின்று வஞ்சகம் வெளிப்பட்டதில்லை''. என இயேசுவைப் பற்றி யார் எழுதிய திருமுகத்தில் எத்தனையாம் அதிகாரத்தில் காணப்படுகிறது?

....................................................................................................

3. தொழுநோயால் வாடிய சீரியா அரசனின் படைத்தலைவன் ஒருவனின் பெயர் என்ன?

....................................................................................................

4. ஐக்கிய நாடுகள் சபையின் பிறந்த தினம் எம்மாதத்தில், எத்தினத்தில் வருகிறது?

.................................... ....................................................

5. உலக நீதிமன்றத்தில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர்?

....................................................................................................

6. ''உலக முடிவு'' (World's End) என்று அழைக்கப்படும் உல்லாசப் பயணிகள் இடம் இலங்கையில் எம்மாவட்டத்தில் அமைந்துள்ளது?

....................................................................................................

பெயர் :....................................................................................

முகவரி.....................................................................................

....................................................................................

———————— இங்கே வெட்டவும் ————————

போட்டியில் ஆறு வினாக்களுக்கும் சரியான விடை அளிப்போர் ஒரு பிரிவாகவும் ஐந்து வினாக்கள் முதல் மூன்று வினாக்கள் வரை விடை அளிப்போர் மற்றொரு பிரிவாக வும் கொள்ளப்படுவர்.

ஆறு வினாக்களுக்கும் சரியான விடை அளிப்போர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப் படும் ஒருவருக்கு ரூபா 100/- பரிசாக வழங்கப்படும். ஐந்து வினாக்கள் முதல் மூன்று வினாக்கள் வரை சரியான விடை அளிப்போர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் இருவ ருக்கு ஆளுக்கு ரூபா 50/- பரிசாக வழங்கப்படும்.

போட்டியில் அனைவரும் பங்குபற்றலாம். ஆனால் தொண்டனில் வெளிவரும் கூப்ப னில் அனுப்பப்படும் விடைகள் மட்டுமே போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். ஒருவர் எத்தனை கூப்பனை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

**விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 15 - 01 - 97**

முகவரி: **விவிலிய - பொது அறிவுப் போட்டி - 17**

**தொண்டன்**

**அ. பெ. எண் 44, மட்டக்களப்பு.**

## விவிலிய - பொது அறிவுப் போட்டி - 15 முடிவுகள்

**விடைகள் :**

1) ஏழு அப்பம் பலுகிய புதுமைக்குப் பின்
2) எலிசேயு
3) உரோமையர்
4) மின்டானோ
5) மைக்கல் ஜோன்சன்
6) எம். எஸ். என். மணி

பரிசு பெறுவோர் :

(அனைத்து வினாக்களுக்கும் சரியான விடைகளை எவருமே எழுத வில்லை. இரண்டாம் பிரிவிலும் இருவர் மட்டுமே சரியான விடைகளை எழுதியிருந்தனர்.)

பரிசு ரூபா 50/-

அ. அமலன் தினேஸ்குமார்
118, பார் வீதி,
மட்டக்களப்பு.

அதிரியான் தெரேசாள் றெவ்வல்
6ம் வட்டாரம்
வங்காலை.



## வாழ்த்துகிறோம் - - வேண்டுகிறோம்

இம்மாதம் 09ம் திகதி தமது பிறந்த தினத்தையும், 20ம் திகதி குருத்துவ வாழ்வில் முப்பத்தியைந்தாவது ஆண்டு நிறைவையும் கொண்டாடும் நமது ஆயர் பேரருள் திரு. **யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை** அவர்களை தொண்டன் நெஞ்சார வாழ்த்துகிறான். மேய்ப்புப் பணியில் மேன்மையுற நல்லாரோக்கியமும், இறை அருளும் நிறைய வேண்டுகிறான்.

(26ம் பக்கத் தொடர்)

5) பொது நிலையினரை அப்போஸ்தலிக்க ஆர்வத்தில் வளர்த்தல். இவை போன்ற பணிகளை நேரத்திற்கும், காலத்திற்கும் ஏற்ற வகையில் நற்செய்தியைத் பரப்ப எந்த வழி அதி முக்கியமோ அதனூடாக சாட்சியம் பகர்கின்றது.

இன்று நமது நாட்டிலும் இச்சபை வேரூன்றி நற்செய்திக்கு சாட்சி பகரத் தொடங்கியுள்ளது. இன்று இலங்கையைச் சேர்ந்த சில அங்கத்தினருடன் இலங்கையின் சில மறை மாநிலங்களில் தமது பணியை ஆற்றிவருகின்றது. புதிதாக இச்சபையில் சேருவோருக்கான பயிற்சியை வழங்க கண்டி நகரத்திலே 'கிளாரட் நிவாஸ்' என்னும் பயிற்சியகத்தை நிறுவி ஆர்வமுடைய இளைஞர்களுக்கு தந்தை கிளாரட் வழியில் யேசுவின் அடி செல்ல உதவி புரிகின்றது.

இன்று இச்சபை உன்னையும் சந்திப்பதில் பேருவகை அடைகின்றது. உயரிய இலட்சிய வாழ்விற்காய் அழைத்து நிற்கின்றது.

விரும்புவோரிற்கான கல்வி அடிப்படைத் தகுதி;

★ கல்விப் பொ/சா பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

★ ஆர்வமுடைய எந்த மாணவரும் வகுப்பு வரையறை அற்று தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;

Fr, Albert T. Arulraj CMF
St. Claret Centre
55, Ragama Road. Welisara.
Ragama. Phone: 01- 958542.

## சாகித்திய கலாபிரசாதினி விருது

கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய சாகித்திய விழாவில் மூதூரைச் சேர்ந்தவரும், தற்போது மட்டக்களப்பில் வசிப்பவருமான திரு. A. S. பாய்வா சிறந்த கவிதைக்கான 'கலாபிரசாதினி' விருதைப் பெற்றுள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 18ம் திகதி முதல் 20ம் திகதி வரை கங்குரான்கெத்த மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அரச சாகித்திய விழாவில் இவ்விருது வழங்கப்பட்டது.

கிராம சேவையாளராகப் பணிபுரியும் திரு. A. S. பாய்வா அவர்கள் ஏற்கனவே 'தொண்டன்' நடாத்திய சிறுகதைப் போட்டியிலும் மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச சபை நடாத்திய சிறுகதை, கவிதைப் போட்டிகளிலும் பரிசு பெற்றவர். இசைக் கலைஞரும், பாடலாசிரியருமான இவரது பாடல்கள் பல, இலங்கை வானொலியில் ஈழத்துப் பாடல்களாக ஒலித்துள்ளன.

பரிசு பெற்ற நமது கலைஞரை பாராட்டுவோம்.

## தமிழ்க் கிறீஸ்தவ இதழ்கள் - ஆய்வு நூல்

தமிழில் வெளிவந்த - வெளிவருகின்ற கிறீஸ்தவ இதழ்கள் பற்றிய ஆய்வு நூல் ஒன்று தமிழகத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இம்மாதம்(டிசம்பர்)02ம் திகதி சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவுக்கு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தலைமை தாங்கினார்.

'ராணி' ஆசிரியர் அ. மா. சாமி அவர்களால் வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் இலங்கையில் வெளிவரும் கிறீஸ்தவ வெளியீடுகள் பற்றிய விபரங்களும் இடம் பெற்றுள்ளதாம்.

Registered as a News Paper in Sri Lanka:

# காற்றில் கலந்து வரும்

## நத்தார் - புதுவருட சிறப்பு நிகழ்ச்சிகள்
## டிசம்பர் - 1996

நாள்: 24
நேரம்: இரவு 9. 30 மணி.
★ புதிய உலகம்
நத்தார் திருவிழிப்பு ஆராதனை
வழங்குவோர்: புனித மரியாள் பேராலயம், மட்டக்களப்பு.

—

நாள்: 25
நேரம்: காலை 10. 30 மணி.
★ புதிய உலகம்
கிறிஸ்து பிறப்பு விழா
உரை, நாடகம், கரோல்

—

நாள். 26
நேரம்: மாலை 7. 00 மணி.
★ புதிய உலகம்
முதல் வேதசாட்சி விழா
- உரை
- மாட்சிமை முனியின் சாட்சியம் உரைச் சித்திரம்

—

நாள்: 28
நேரம்: காலை 10. 45 மணி.
★ புதிய உலகம்
மாசில்லாக் குழந்தைகள் விழா
உரை, நாடகம்

—

நாள்: 29
நேரம்: மாலை 7. 00 மணி.
★ புதிய உலகம்
திருக் குடும்ப விழா
உரை, நாடகம்

—

நாள்: 31
நேரம். இரவு 10. 30 மணி.
★ புதிய உலகம்
நன்றி விழா
உரை: சித்திரம்

—

நாள்: ஜனவரி 01
நேரம்: மாலை 5. 00 மணி.
★ புதிய உலகம்
புத்தாண்டுச் செய்தி
நாடகம்

—

தொகுப்பு: மலர்வேந்தன்

தொடர்பு: அ. பெ. எண். 44
மட்டக்களப்பு.

இச்சஞ்சிகை மட்டக்களப்பு வளர்மதி அச்சகத்தில் அச்சிட்டு,
தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 14 - 12 - 96 ல் வெளியிடப்பட்டது.